அந்தரங்கமானது

OLD

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்


## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 32 - வணிகக்கல்வி

### பழைய பாடத்திட்டம்

### புள்ளியிடும் திட்டம்

Department of Examinations



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணாங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# புள்ளி வழங்கும் திட்டம்

## க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020
## 32 - வணிகக்கல்வி
## (பழைய பாடத்திட்டம்)

2020/10/23

### பரீட்சகர்களின் கவனத்திற்கு

விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான புள்ளி வழங்கும் இத்திட்டமானது பூரணமான விடைகளை உள்ளடக்கியதாகக் கருதப்படமாட்டாது. இதில் தரப்படும் விடயங்கள் புள்ளியிடலுக்கான ஒரு வழிகாட்டியாகவே அமையும் என்பதனை மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் பரீட்சகர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும். எனவே மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் பரீட்சகராகிய நீங்கள் இப்பாடம் தொடர்பில் பூரண அறிவு, கற்றல், கற்பித்தல் மற்றும் தனது அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சார்த்திகள் முன்வைத்துள்ள விடைகளை மிகவும் கவனமாகப் பரிசீலித்துப் புள்ளிகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். பரீட்சார்த்திகளின் எதிர்காலம் நீங்கள் வழங்கும் புள்ளிகளிலேயே தங்கியிருப்பதனால் இப்பணி தொடர்பில் நீதியாகவும், நேர்மையாகவும் இரகசியத் தன்மையைப் பேணுபவராகவும் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடுவதுடன் ஒருமைப்பாட்டினையும் பேணுவது பரீட்சகர்களாகிய உங்களது கடமையாகும்.

Department of Examinations

# க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

## 32 - வணிகக்கல்வி

வணிகக் கல்விப் பாடத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களை மதிப்பிடக்கூடியவாறும் மாணவர்களின் பாடம் தொடர்பான விடயங்கள், அறிவு தர்க்க ரீதியாக ஒப்பிட்டுப் பார்த்து வணிக அனுபவங்களையும், அவை செயற்படும் ஆற்றலையும், வணிக உலகின் போக்குகளையும், செயல்முறை தொடர்பான அறிவு மற்றும் தகவல் தொழிநுட்ப அறிவு போன்றவற்றையும் மிகவும் சிறந்த முறையில் மதிப்பிடுவதற்கு ஏற்ற வகையில் இவ்வினாப்பத்திரத்தில் வினாக்கள் வினவப்பட்டுள்ளன.

Department of Examinations

| புள்ளிகள் வழங்கப்படுவது தொடர்பான தொகுப்பு | | | |
|---|---|---|---|
| வினாப் பத்திரம் I | 50 வினாக்களைக் கொண்டது. | 50 × 02 புள்ளிகள் வீதம் | 100 புள்ளிகள் |
| வினாப் பத்திரம் II | பகுதி I, பகுதி II ஆகியவற்றில் இருந்து ஆகக் குறைந்தது 2 வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடை எழுதப்படல் வேண்டும். | | |
| பகுதி I | ஒவ்வொரு வினாவும் 5 பகுதிகள் x 04 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகளைக் கொண்டவையாகும். | | |
| 1ஆம் வினா<br>2ஆம் வினா<br>3ஆம் வினா<br>4ஆம் வினா | இரு வினாக்களைத் தெரிவு செய்தால் (2 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்) அல்லது மூன்று வினாக்களைத் தெரிவு செய்தால் (3 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள்) வழங்கப்படும். | ∴ மொத்தம் 40 புள்ளிகள் அல்லது 60 புள்ளிகள் | |
| பகுதி II | ஒவ்வொரு வினாவும் 5 பகுதிகள் x 04 புள்ளிகள் வீதம் 20 புள்ளிகளைக் கொண்டவையாகும். | | |
| 5ஆம் வினா<br>6ஆம் வினா<br>7ஆம் வினா<br>8ஆம் வினா | மூன்று வினாக்களைத் தெரிவு செய்தால் (3 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 60 புள்ளிகள்) அல்லது இரு வினாக்களைத் தெரிவு செய்தால் (2 வினாக்கள் x 20 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்) வழங்கப்படும். | ∴ மொத்தம் 60 புள்ளிகள் அல்லது 40 புள்ளிகள் | 100 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் I, வினாப்பத்திரம் II ஆகியவற்றுக்கான மொத்தப் புள்ளிகள் | | | 200 புள்ளிகள் |
| ∴ இறுதிப் புள்ளி | | | 100 |

Department of Examinations

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

Department of Examinations

(i) ....................................................................... ✓ △ 4/5
.......................................................................
.......................................................................

(ii) ....................................................................... ✓ △ 3/5
.......................................................................
.......................................................................

(iii) ....................................................................... ✓ △ 3/5
.......................................................................
.......................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

**புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

Department of Examinations

OLD

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ව්‍යාපාර අධ්‍යයනය I
வணிகக் கல்வி I
Business Studies I

32 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**
- **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
- மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது **சுட்டெண்ணை** தெளிவாக எழுதுக.
- **1** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **31** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.

சுட்டெண் : ..............................

**பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்**

| வினாத்தாள் I | |
|---|---|
| **வினா இல.** | **புள்ளிகள்** |
| 01 - 30 | |
| 31 - 50 | |
| **மொத்தம்** | |

| | கையொப்பம் | குறியீட்டு இல. |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |

Department of Examinations

**1.** வணிகம் என்பது,
(1) இலாபத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு மக்கள் குழுமம் ஆகும்.
(2) சேவைகளை அடிப்படையாகக் கொண்ட எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் ஆகும்.
(3) பொருட்களை விற்பனை செய்வதற்கான தனிப்பட்டவர்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட முயற்சி ஆகும்.
(4) பொருட்களை உற்பத்தி செய்வதற்கான தனிப்பட்டவர்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட முயற்சி ஆகும்.
(5) தனிப்பட்டவர்களது தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும் ஆகும். (......)

**2.** இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வகைப்படுத்தலின் படி கைத்தொழில் துறைக்கு உரித்தான பொருளாதார நடவடிக்கை
(1) மீள்சுழற்சி ஆகும். (2) சட்டப் பரிந்துரை (Legal advococy) ஆகும்.
(3) காப்புறுதி ஆகும். (4) மரக்கறி விதைகள் விற்பனை ஆகும்.
(5) காடு வளர்ப்பு ஆகும். (......)

**3.** உரிமையாளர்களுக்கு நியாயமான உழைப்பை வழங்குவதற்கு நிறுவனங்களால் மேற்கொள்ளக்கூடிய ஒரு நேர் நடவடிக்கை யாது?
(1) கழிவுப்பொருட்களை முகாமை செய்தல்
(2) சமூக நலன்புரிச் சேவைகளைப் பூர்த்தி செய்தல்
(3) ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்
(4) பயனுறுதியான முயற்சிகளில் பணத்தை முதலீடு செய்தல்
(5) பொருட்கள் சேவைகளுக்கான நியாயமான விலையைத் தீர்மானித்தல் (......)

**4.** வணிகமொன்றின் நிதி ஆற்றல் வளர்ச்சியடைதலும் அதன் உற்பத்திப்பொருள்களுக்கான புதிய சந்தையொன்று உருவாதலும் அவ்வணிகத்துக்கு முறையே
(1) பலமும் வாய்ப்புமாகும். (2) பலமும் அச்சுறுத்தலுமாகும்.
(3) வாய்ப்பும் பலவீனமுமாகும். (4) வாய்ப்பும் அச்சுறுத்தலுமாகும்.
(5) வாய்ப்பும் பலமுமாகும். (......)

**5.** இலங்கையில் மிகவும் பரவலாகக் காணப்படும் வணிக நிறுவன வகை யாது?
(1) பங்குடைமை (2) கூட்டுறவு
(3) வரையறுத்த பொதுக் கம்பனி (4) தனியுடைமை
(5) அங்கீகார வணிகங்கள் (......)

6. நிறுவனமொன்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் சில விசைகள் பின்வருமாறு:

A - நிறுவன கலாசாரம் B - வழங்குனர்கள்
C - வாடிக்கையாளர்கள் D - போட்டியாளர்கள்
E - முகாமையாளர்கள் F - ஊழியர்கள்
G - இயற்கை வளங்கள் H - நிறுவனக் கட்டமைப்பு

மேற்குறித்தவற்றுள் நிறுவனமொன்றின் அகச் சூழல் விசைகளை மாத்திரம் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவுசெய்க.

(1) A, B, D, F (2) A, E, F, H (3) C, D, F, G
(4) C, E, F, G (5) D, F, G, H (……)

7. நிலைபேறான பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கு வணிகமொன்று பங்களிப்புச் செய்ய வேண்டியது
(1) உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதிலாகும்.
(2) பொருட்களை இறக்குமதி செய்வதிலாகும்.
(3) வேலைவாய்ப்பை உருவாக்குவதிலாகும்.
(4) வருமானப் பங்கீட்டுச் சமநிலையைப் பேணுவதிலாகும்.
(5) உள்வாரியான விலை உறுதித்தன்மையைப் பேணுவதிலாகும். (……)

8. பொதுப் பண்டங்களின் விலை அதிகரிக்கும்போது உற்பத்தியைக் குறைக்கும் சந்தர்ப்பத்தில் வணிகமொன்றின் விற்பனைப் புரள்விலும் இலாபத்திலும் உடனடியாக ஏற்படக்கூடிய விளைவு யாது?

| | விற்பனைப் புரள்வு | இலாபம் |
|---|---|---|
| (1) | குறையும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | குறையும் |
| (3) | மாற்றமில்லை | மாற்றமில்லை |
| (4) | குறையும் | குறையும் |
| (5) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |

(……)

9. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது இலங்கை மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் நாணயக் கொள்கை சார்ந்த கருவிகளையும் அவை தொடர்பான விவரணங்களையும் எடுத்துக்காட்டுகிறது.

| கருவிகள் | விவரணங்கள் |
|---|---|
| (i) நிலையான வைப்பு வசதி வீதம் | A - இலங்கை மத்திய வங்கி நிலையான அல்லது தற்காலிக அடிப்படையில் அரசாங்கப் பிணைகளைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் |
| (ii) திறந்த சந்தைச் செயற்பாடுகள் | B - வணிக வங்கிகளின் தற்காலிக திரவத்தன்மை நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக முற்பணங்களை அனுமதிப்பதில் மத்திய வங்கியால் விதிக்கப்படும் வட்டி வீதம் |
| (iii) சட்டரீதியான ஒதுக்கு வீதம் | C - அரசாங்கப் பிணைகளின் அடைமானத்தின் மூலம் வணிக வங்கிகள் நிதிகளைப் பெற்றுக்கொள்கின்றபோது மத்திய வங்கியால் அறவிடப்படும் வட்டி வீதம் |
| (iv) நிலையான கடன் வசதி வீதம் | D - வணிக வங்கிகளினால் தமது வைப்புக்களில் இருந்து மத்திய வங்கியில் பேணுமாறு வேண்டிக் கொள்ளப்படும் வைப்புத் தொகை |
| (v) வங்கி வட்டி வீதம் | E - வணிக வங்கிகள் தமது மிகையான நிதிகளை அரசாங்கப் பிணைகளில் முதலீடு செய்யும்போது மத்திய வங்கியால் செலுத்தப்படும் வட்டி வீதம் |

மேலே தரப்பட்டுள்ள கருவிகளின் ஒழுங்கிற்கமைவாகச் சரியாகப் பொருந்தும் விவரணங்களின் தெரிவு யாது?

(1) A, C, D, E, B (2) C, D, A, B, E (3) C, D, A, E, B
(4) E, A, D, B, C (5) E, A, D, C, B (……)

10. அங்கீகார வணிகத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றவருக்கு
(1) சீரான இலாபத்தை உழைக்க முடியும்.
(2) முகாமைத்துவப் பயிற்சியைப் பெறமுடியும்.
(3) முழுமையான சுயாதீனத்தைப் பெறமுடியும்.
(4) முதலீட்டு இடர் காணப்படுவதில்லை.
(5) பாரிய கிரயத்தினைத் தாங்க வேண்டிய தேவை இல்லை. (……)

Department of Examinations

**11.** முயற்சியாண்மை ஊடாக உருவாகும் தனிப்பட்ட நன்மை
(1) பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்தல்
(2) வருமானத்துக்கான சந்தர்ப்பங்கள் உருவாதல்
(3) வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பங்கள் உருவாதல்
(4) உயர்வான அர்ப்பணிப்பின் மூலம் சிறந்த நன்மைகள் கிடைத்தல்
(5) புதிய பொருட்கள் சேவைகளை நுகர்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுதல் (......)

**12.** முயற்சியாளர் ஒருவர் பாதீட்டைப் பயன்படுத்துவது
(1) நிதியியல் தேவைப்பாடுகளைக் குறைத்துக் கொள்வதற்காகவாகும்.
(2) ஊழியர்களுக்கு நிதியியல் தகவல்களை வழங்குவதற்காகவாகும்.
(3) வணிகச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காகவாகும்.
(4) வணிகத்தின் நிதிப் பெறுபேற்றினைக் கண்காணிப்பதற்காகவாகும்.
(5) சமப்பாட்டுப் புள்ளியில் வெளியீட்டு மட்டத்தை இனங்காண்பதற்காகவாகும். (......)

**13.** **கூற்று A** : அரசாங்கத் துறையில் இருக்கும் சகல நிரந்தர ஊழியர்களுக்கும் அரச சேவை சேமலாப நிதியம் ஏற்புடையதாகும்.
**கூற்று B** : சகல தனியார்துறை ஊழியர்களுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் ஏற்புடையதாகும்.
மேலே தரப்பட்டுள்ள இரண்டு கூற்றுகளுள்
(1) **A** சரியானது, **B** தவறானது.
(2) **A** தவறானது, **B** சரியானது.
(3) **A, B** ஆகிய இரண்டும் தவறானவை.
(4) **A** யும் **B** யும் சரியானவை என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படுகிறது.
(5) **A** யும் **B** யும் சரியானவை என்பதுடன் **B** யினூடாக **A** விபரிக்கப்படவில்லை. (......)

**14.** சில்லறை வியாபாரி ஒருவர் தனது பொருட்களை இணையவழி ஊடாக விற்பனை செய்யும்போது அவர் முதலில்,
(1) கூடுதலான இருப்பைப் பேணுதல் வேண்டும்.
(2) வாடிக்கையாளரிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.
(3) ஒரு நிரந்தரமான வாடிக்கையாளர் தளத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
(4) உயர்வான வாடிக்கையாளர் கவர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
(5) எந்தவொரு நாட்டிலும் சந்தைப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். (......)

**15.** முதல்வர் சார்பாக தனது சொந்தப் பெயரின் கீழ் பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் முகவர்
(1) காரணிகர் ஆவார். (2) தரகர் ஆவார். (3) தரகு முகவர் ஆவார்.
(4) பொறுப்பு முகவர் ஆவார். (5) ஏலவர் ஆவார். (......)

**16.** பின்வருவன சந்தைப்படுத்தல் மேம்படுத்தல் கலவையில் பயன்படுத்தக்கூடிய சில கருவிகள் ஆகும்.
A - இணையத்தளங்கள் B - விற்பனைக் கூட்டங்கள்
C - கண்காட்சிகள் D - விபரப்பட்டியல் (Catalogue)
E - தொலைபேசி அழைப்புக்கள் F - மாதிரிகள்
G - சமூக ஊடகம் H - ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்
மேலே தரப்பட்டவற்றுள் நேர் சந்தைப்படுத்தலில் மட்டும் பயன்படுத்தக்கூடிய கருவிகளைக் கொண்டுள்ள தொகுதி எது?
(1) A, D, E, F (2) A, D, E, G (3) B, C, F, G
(4) C, D, E, G (5) C, F, G, H (......)

**17.** கீழே தரப்பட்டுள்ள வைத்தியசாலை முகாமைத்துவப் பணிகள் இரண்டின் ஒழுங்கிற்கு அமைவாக முகாமைத்துவத்தின் இரண்டு உப-வகிபாகங்கள் சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
**A** - நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக வைத்தியசாலை ஊழியர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
**B** - போதுமான அளவு சிகிச்சை வசதிகளை உறுதிப்படுத்தலும் பாதுகாப்பான மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளலும்
(1) தலைவரும் தொடர்புகளைப் பேணுபவரும்
(2) தகவல்களை வழங்குபவரும் தடைகளைக் கையாள்பவரும்
(3) முயற்சியாளரும் தொடர்புகளைப் பேணுபவரும்
(4) தொடர்புகளைப் பேணுபவரும் தகவல் வழங்குபவரும்
(5) தடைகளைக் கையாள்பவரும் கண்காணிப்பாளரும் (......)

Department of Examinations


**18.** நெருக்கடியான சூழ்நிலையின்போது நிறுவனமொன்று இணையவழி ஊடாக வீட்டில் இருந்து பணி செய்வதற்கான வசதியினை ஊழியர்களுக்கு வழங்குகிறது. இக்கூற்று மிகவும் சிறப்பாக எடுத்துக்காட்டுவது,
(1) திட்டமிடலின் முக்கியத்துவத்தினை ஆகும்.
(2) மாற்றமடையும் சூழலுக்கு இசைவாக்கம் அடைதலை ஆகும்.
(3) நிறுவனம் சார்ந்த பலவீனத்தைத் தவிர்த்தலை ஆகும்.
(4) முகாமைத்துவம் சார்ந்த பணிகளைக் கூட்டிணைத்தலை ஆகும்.
(5) தொழில்நுட்ப அறிவின் தேவைப்பாட்டை ஆகும். (......)

**19.** நிறுவனமொன்றுக்கு திட்டமிடல் மிகவும் முக்கியமாவது
(1) நெகிழ்வுத்தன்மையுடையதாக இருப்பதற்காகும்.
(2) எதிர்கால இலக்கை குவிமையப்படுத்துவதற்காகும்.
(3) திணைக்களங்களுக்கிடையே போட்டியை உருவாக்குவதற்காகும்.
(4) இடரைக் குறைப்பதற்காகும்.
(5) ஊழியர்களின் உற்சாகத்தை அதிகரிப்பதற்காகும். (......)

**20.** கீழே தரப்பட்டுள்ள இரண்டு தீர்மானங்களினதும் ஒழுங்கிற்கமைவாக சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ள தலைமைத்துவப் பாங்குகளைத் தெரிவுசெய்க.
**A** : ஊழியர்கள் அவர்களது பணிகளை நிறைவேற்றுவதற்கு முழுச் சுதந்திரமும் கட்டுப்பாடும் வழங்கப்படுதல்
**B** : அதிகாரப் பன்முகப்படுத்தலின் மூலம் ஊழியப் பங்குபற்றுதலைப் பெற்றுக்கொள்ளல்
(1) சர்வாதிகார தலைமைத்துவம், ஜனநாயக தலைமைத்துவம்
(2) ஜனநாயக தலைமைத்துவம், தலையிடாத் தலைமைத்துவம்
(3) ஜனநாயக தலைமைத்துவம், சர்வாதிகார தலைமைத்துவம்
(4) சர்வாதிகார தலைமைத்துவம், தலையிடாத் தலைமைத்துவம்
(5) தலையிடாத் தலைமைத்துவம், ஜனநாயக தலைமைத்துவம் (......)

**21.** செயற்பாட்டு முகாமைத்துவத்தின் தொழிற்பாடுகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) உற்பத்திப் பொறியியல், இருப்புக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பாடு, உற்பத்தித் திட்டமிடல்
(2) மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், நியமங்களை உருவாக்குதல், செயற்றினை அளவிடுதல், உற்பத்திக் கட்டுப்பாடு
(3) உற்பத்திப் பொறியியல், உற்பத்தித் திட்டமிடல், மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல், உற்பத்திக் கட்டுப்பாடு
(4) உற்பத்திப் பொறியியல், அகக் கணக்காய்வு, இருப்புக் கட்டுப்பாடு, உற்பத்திக் கட்டுப்பா
(5) நியமங்களை உருவாக்குதல், செயற்றிறனை அளவிடுதல், வேறுபாடுகளை இனங்காணுதல், ஆராய்ச்சி அபிவிருத்தி (......)

**22.** கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் **A**, **B** ஆகியவற்றின் மூலம் எடுத்துக்காட்டப்படுவது,




(1) நுகர்வோர் கேள்வி குறைதலும் சுழற்சிக் காலம் அதிகரித்தலும்
(2) நுகர்வோர் கேள்வி அதிகரித்தலும் சுழற்சிக் காலம் குறைவடைதலும்
(3) நுகர்வோர் கேள்வியும் முதன்மைக் காலமும் அதிகரித்தல்
(4) மறுகட்டளைத் தொகையும் முதன்மைக் காலமும் அதிகரித்தல்
(5) ஆகக் குறைந்த இருப்பு மட்டம் குறைதலும் சுழற்சிக் காலம் அதிகரித்தலும் (......)

Department of Examinations

**23.** தரக் கட்டுப்பாட்டில் பயன்படுத்தக்கூடிய ஒரு நுட்பம்
(1) புள்ளிவிபரச் செயன்முறைக் கட்டுப்பாடு
(2) சரக்கிருப்பு மட்டக் கட்டுப்பாடு
(3) செயற்பாட்டுக் கிரயக் கட்டுப்பாடு
(4) வணிகச் சூழல் கட்டுப்பாடு
(5) மூலப்பொருள் கிரயக் கட்டுப்பாடு (......)

**24.** உற்பத்திப்பொருளின் அல்லது சேவை ஒன்றின் 'சந்தை இடநிலைப்படுத்தல்' என்பதனால் கருதப்படுவது,
(1) சந்தையில் விற்பனையின் அதிகரிப்பாகும்.
(2) சந்தைப் பங்கின் அதிகரிப்பாகும்.
(3) சந்தையில் நீண்டகால நிலைத்திருப்பாகும்.
(4) வணிகரின் தனியுரிமை சக்தி அதிகரித்தலாகும்.
(5) நுகர்வோர் மனதில் சாதகமான மனப்பாங்கைக் கட்டியெழுப்புதலாகும். (......)

**25.** கம்பனி ஒன்றின் கடந்த வருட நடைமுறை விகிதமும் விரைவு விகிதமும் முறையே 3:1, 2:1 ஆகும். நடப்பாண்டிற்கான நடைமுறை விகிதத்தில் எதுவித மாற்றமும் இல்லாதபோதும் விரைவு விகிதமானது 1:1 ஆகும். இதனூடாக ஒப்பீட்டளவில் எடுத்துக்காட்டப்படுவது
(1) கம்பனியின் திரவத்தன்மை அதிகரிப்பு (2) இறுதி இருப்பின் பெறுமதி அதிகரிப்பு
(3) இறுதி இருப்பின் பெறுமதி குறைவு (4) கம்பனியின் திரவத்தன்மை குறைவு
(5) கம்பனியின் மொத்தப் பொறுப்புக்களில் அதிகரிப்பு (......)

**26.** பின்வருவன பல்வேறு வகையான நிதிச் சந்தைகள் ஆகும்.
A - வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை B - கூட்டுரு முறிச் சந்தை
C - வணிகப் பத்திரச் சந்தை D - அந்நியச் செலாவணிச் சந்தை
E - பங்குச் சந்தை F - திறைசேரி முறிச் சந்தை
மேலே தரப்பட்டவற்றுள் மூலதனச் சந்தைக்கு மட்டும் உரித்தான தொகுதி யாது?
(1) A, B, F (2) B, D, F (3) B, E, F (4) C, D, F (5) C, E, F (......)

**27.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது விண்ணப்பதாரிகளைத் தெரிவுசெய்வதற்கான முறைகளையும் அவற்றின் மூலம் அளவிடக்கூடியவற்றையும் எடுத்துக்காட்டுகிறது.

| முறைகள் | அளவிடக்கூடியவை |
|---|---|
| (i) விண்ணப்ப மதிப்பீடு | A - மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் |
| (ii) உளச்சார்புப் பரீட்சைகள் | B - வேலைக்குரிய பொருத்தமான பணிகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றல் |
| (iii) செய்முறைப் பரீட்சைகள் | C - விண்ணப்பதாரிகளின் தகுதிகளின் பொருத்தப்பாடு |
| (iv) ஆளுமைப் பரீட்சைகள் | D - தர்க்கரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல் |

மேலே தரப்பட்டுள்ள முறைகளின் ஒழுங்குக்கு அமைவாக அளவிடக் கூடியவற்றைச் சரியாக எடுத்துக்காட்டும் தெரிவு யாது?
(1) B, A, C, D (2) B, C, D, A (3) C, D, A, B (4) C, D, B, A (5) D, C, A, B (......)

**28.** ஊழியர் செயற்றிறன் மீது நிதிசார் நலன்களை வழங்குவதன் மூலம் ஏற்படக்கூடிய உடனடி விளைவு,
(1) ஊழியர் ஊக்கம் அதிகரித்தல் (2) ஊழியர் உற்பத்தித்திறன் அதிகரித்தல்
(3) ஊழியர் கவர்ச்சி அதிகரித்தல் (4) ஊழியர் வரவின்மை குறைவடைதல்
(5) உரிமையாளர் - ஊழியர் உறவு முன்னேற்றமடைதல் (......)

**29.** மனிதவள முகாமைத்துவத் தொழிற்பாடுகளின் வெற்றியை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒரு நியதி, ஊழியர்
(1) பயிற்சி ஆகும். (2) அசைவு ஆகும்.
(3) வரவின்மை ஆகும். (4) அறிமுகம் ஆகும்.
(5) பிற நலன்கள் ஆகும். (......)

**30.** முகாமைத்துவ செயன்முறையில் பயன்படுத்தப்படும் சில படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன.
A - கூட்டிணைத்தல் B - இலக்குகளை இனங்காணுதல்
C - பிரச்சினையை இனங்காணுதல் D - வேலையைக் கையளித்தல்
E - திணைக்களப்படுத்தல் F - ஊழியர் பயிற்சி
G - வளப் பகுப்பாய்வு H - திணைக்களங்களுக்கு இடையிலான தொடர்பாடல்
மேலே தரப்பட்டவற்றுள் ஒழுங்கமைத்தலுடன் தொடர்புடைய படிமுறைகளை மட்டும் உள்ளடக்கியது
(1) A, B, D, E (2) A, D, E, G (3) B, E, F, H (4) D, E, G, F (5) D, E, F, H (......)



Department of Examinations

- **31** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளியைப் **பொருத்தமான சொல் / சொற்களைப்** பயன்படுத்தி நிரப்புக.

**31.** (அ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்களாவன பொருளாதாரம் மற்றும் ........................ உறுதித்தன்மையையும் ........................ முறைமையின் உறுதித்தன்மையையும் பேணுவதாகும்.

(ஆ) பங்காளர்களின் கூட்டுப் ........................ வரையறையற்றது என்பதுடன் இதனால் இவ்வாறான வணிகங்களில் தனியுடைமையிலும் பார்க்க ........................ எடுத்தல் செயன்முறையானது நீண்ட காலத்தை வேண்டி நிற்கின்றது.

**32.** (அ) அண்மித்த பணமானது ஒரு ........................ என்பதுடன் அதனை இலகுவாக காசாக மாற்ற முடிவதுடன் இது ........................ திரட்டாகவும் தொழிற்படுகின்றது.

(ஆ) நாணயத்துடன் ஒப்பிடும்போது வங்கிப் பணத்தின் ........................ குறைவாகக் காணப்படுவதுடன் வங்கிப் பணத்திற்கு உதாரணமாக ........................ வைப்பைக் குறிப்பிட முடியும்.

**33.** (அ) கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பிரதான தொழிற்பாடு கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களிடமிருந்து ........................ சேகரிப்பதும் கிராமிய ........................ வலுவான நிறுவனம் சார்ந்த ஆதரவை வழங்குவதும் ஆகும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்களாகத் தொழிற்படுவதற்குத் தகுதியுடைய இரு வகையான நிறுவனங்கள் ........................ வணிக வங்கிகளும் ........................ முதனிலை விநியோகக் கம்பனிகளும் ஆகும்.

**34.** (அ) இலத்திரனியல் வங்கியியல் முறைமையானது வாடிக்கையாளர்கள் தமது ........................ ஆரம்பிப்பதற்கும் நிதிசார் ........................ நிறைவேற்றுவதற்கும் வசதியளிக்கின்றது.

(ஆ) இலங்கையில் அரசாங்கத் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவகம் ........................................ என்பதுடன் அதன் தொலைபேசி இலக்கம் ................ ஆகும்.

**35.** (அ) ஏற்றுமதி விவசாய உற்பத்திப்பொருட்களின் நுகர்வுக்கான பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுமதி நாட்டின் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவகத்தால் வழங்கப்படும் ஆவணம் ........................ சான்றிதழ் என்பதுடன் கப்பலேற்றுகைக்காக பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் கப்பலேற்றுகை நிறுவனத்தால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆவணம் ........................ ஆகும்.

(ஆ) வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் உள்ளூர் கைத்தொழில்களை ........................ அரசாங்கமானது இறக்குமதிகளின் மீது ........................................ விதிக்கின்றது.

**36.** (அ) தொழிற்பிரிப்பின் காரணமாக ........................................ ஏற்படுவதுடன் அதன் மூலம் ஊழியர்களின் ........................................ அதிகரிக்கும்.

(ஆ) விளம்பரங்களை அச்சிடுதல் ........................ உற்பத்தி முறைக்கு உதாரணம் என்பதுடன் தனிப்பட்டவர்களுக்கான ஆடைகளைத் தைத்தல் ........................ உற்பத்தி முறைக்கு உதாரணம் ஆகும்.

**37.** (அ) ISO ................ நியமமானது சூழல்சார் முகாமைத்துவத்துக்கு உரியதென்பதுடன், ISO 9001 நியமமானது ................ முகாமைத்துவத்துக்கு உரியதாகும்.

(ஆ) தகவல் முறைமையின் சகல பௌதீகக் கூறுகளும் ........................ என்பதுடன் தரவுச் செயன்முறைப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் கணினி நிகழ்ச்சித்திட்டம் ........................ ஆகும்.

**38.** (அ) பொருட்கள் சேவைகளை நுகர்வதன் மூலம் நுகர்வோர் ........................ பெற்றுக் கொள்வதுடன் அது ........................ எனப்படுகிறது.

(ஆ) ........................ சிறந்த சேவையை வழங்குவதற்காக நிறுவனமொன்றின் சகல ஊழியர்களாலும் மேற்கொள்ளப்படும் கூட்டுமுயற்சி ........................ சந்தைப்படுத்தல் என அழைக்கப்படும்.

Department of Examinations

**39.** (அ) தொகுதிக் கடன்களுக்கு ஒரு நிலையான வீதத்தில் .......................... செலுத்த வேண்டும் என்பதுடன் சாதாரண பங்குகளுக்கு மாறுபட்ட வீதத்தில் .......................... செலுத்த வேண்டியுள்ளது.

(ஆ) நிறுவனமொன்றின் தற்போதைய வேலைச் செயற்றிறனை அதிகரிப்பதாக ஊழிய .................... காணப்படுகின்ற அதேவேளை எதிர்கால செயற்றிறனை மையப்படுத்தியதாக ஊழியர் ......................... காணப்படுகிறது.

**40.** (அ) உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடும்போது நிதி முகாமையாளரது சம்பளமானது ................. கிரயமாக வகைப்படுத்தப்படும் அதேவேளை உற்பத்தி ஊழியர்களது சம்பளமானது ................. கிரயமாக வகைப்படுத்தப்படுகின்றது.

(ஆ) நிறுவனமொன்றின் பல்வேறு பிரிவுகளுக்கும் பதவி நிலைகளுக்கும் இடையிலான இடைத் தொடர்பை அமைப்பு ...................... எடுத்துக்காட்டும் அதேவேளை அவற்றை நிறுவன ............................... மூலம் சுருக்கிக்காட்ட முடியும்.

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்களுக்கு **மிகப் பொருத்தமான விடைகளை** தரப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதுக.

**41.** வணிகங்கள் மனித விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் **நான்கு** வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(1) ....................................................................................................................

(2) ....................................................................................................................

(3) ....................................................................................................................

(4) ....................................................................................................................

**42.** வணிக ஒழுக்கங்களைப் பின்பற்றுவது எவ்வகையில் வணிகங்களுக்கு முக்கியமானது என்பதற்கான **நான்கு** காரணங்களைப் பட்டியலிடுக.

(1) ....................................................................................................................

(2) ....................................................................................................................

(3) ....................................................................................................................

(4) ....................................................................................................................

**43.** வணிகமொன்று நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கும் பிரதான நோக்கங்கள் **நான்கினைத்** தருக.

(1) ....................................................................................................................

(2) ....................................................................................................................

(3) ....................................................................................................................

(4) ....................................................................................................................

**44.** வரையறுத்த தனியார் கம்பனிகளில் காணப்படும் வரையறைகள் **நான்கினை** எழுதுக.

(1) ....................................................................................................................

(2) ....................................................................................................................

(3) ....................................................................................................................

(4) ....................................................................................................................

**45.** இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டுக் கம்பனிகள் பங்களிப்புச் செய்யக்கூடிய **நான்கு** வழிமுறைகளை எழுதுக.

(1) ....................................................................................................................

(2) ....................................................................................................................

(3) ....................................................................................................................

(4) ....................................................................................................................

Department of Examinations

**46.** வெளிநாட்டு வியாபாரத்தில் 'கொள்கலன்களைப்' பயன்படுத்துவதன் மூலம் வணிக நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களை எழுதுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**47.** வரையறுத்த பொதுக் கம்பனிகளால் பயன்படுத்தப்படும் நிதி மூலங்களுக்கு அமைவாக பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| **உள்வாரி மூலம்** | **வெளிவாரி மூலம்** |
|---|---|
| 1. ............................................ | 1. ............................................ |
| 2. ............................................ | 2. ............................................ |

**48.** வணிக நடவடிக்கைகளுக்காக இணையத்தைப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** வழிகளை எழுதுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**49.** வணிகத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் **நான்கினை** எழுதுக.

(1) ..........................................................................................................


(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

(4) ..........................................................................................................

**50.** இணையவழி மூலமான கொள்வனவுச் செயன்முறையுடன் தொடர்புடைய பின்வரும் ஒவ்வொரு குறியீட்டின் மூலமும் வெளிப்படுத்தப்படும் கருத்தினை எழுதுக.

(a)  ................................ (b)  ................................

(c)  ................................ (d)  ................................

Department of Examinations

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2020

පැරණි නිර්දේශය/ பழைய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **32**

විෂයය / பாடம்: **வணிகக் கல்வி**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 5 | 11. | 4 | 21. | 3 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 3 |
| 03. | 4 | 13. | 3 | 23. | 1 |
| 04. | 1 | 14. | 2 | 24. | 5 |
| 05. | 4 | 15. | 1 | 25. | 2 |
| 06. | 2 | 16. | 2 | 26. | 3 |
| 07. | 3 | 17. | 2 | 27. | 4 |
| 08. | 4 | 18. | 2 | 28. | 1 |
| 09. | 5 | 19. | 2 | 29. | 3 |
| 10. | 2 | 20. | 5 | 30. | 1 |

Department of Examinations

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 30 = 60

- **31 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவிலுமுள்ள இடைவெளியைப் பொருத்தமான சொல் / சொற்களைப்** பயன்படுத்தி நிரப்புக.

**31.** (அ) இலங்கை மத்திய வங்கியின் பிரதான குறிக்கோள்களாவன பொருளாதாரம் மற்றும் .......................... உறுதித்தன்மையையும் .......................... முறைமையின் உறுதித்தன்மையையும் பேணுவதாகும்.

(ஆ) பங்காளர்களின் கூட்டுப் .......................... வரையறையற்றது என்பதுடன் இதனால் இவ்வாறான வணிகங்களில் தனியுடைமையிலும் பார்க்க .......................... எடுத்தல் செயன்முறையானது நீண்ட காலத்தை வேண்டி நிற்கின்றது.

அ. விலை, நிதி (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

ஆ. பொறுப்பு, தீர்மானம் (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

**32.** (அ) அண்மித்த பணமானது ஒரு .......................... என்பதுடன் அதனை இலகுவாக காசாக மாற்ற முடிவதுடன் இது .......................... திரட்டாகவும் தொழிற்படுகின்றது.

(ஆ) நாணயத்துடன் ஒப்பிடும்போது வங்கிப் பணத்தின் .......................... குறைவாக காணப்படுவதுடன் வங்கிப் பணத்திற்கு உதாரணமாக, .......................... வைப்பை குறிப்பிட முடியும்.

அ. சொத்து, பெறுமான (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

ஆ. திரவத்தன்மை, நடைமுறை / கேள்வி (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

**33.** (அ) கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் பிரதான தொழிற்பாடு கிராமப் புறங்களில் வசிக்கும் மக்களிடமிருந்து .......................... சேகரிப்பதும் கிராமிய ..........................வலுவான நிறுவனம் சார்ந்த ஆதரவை வழங்குவதும் ஆகும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர்களாக தொழிற்படுவதற்கு தகுதியுடைய இரு வகையான நிறுவனங்கள் .......................... வணிக வங்கிகளும் .......................... முதனிலை விநியோகக் கம்பனிகளும் ஆகும்.

அ. வைப்புக்களை, பொருளாதாரத்துக்கு (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

ஆ. உத்தரவு பெற்ற / உரிமம் பெற்ற, பதிவு செய்யப்பட்ட (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

**34.** (அ) இலத்திரனியல் வங்கியியல் முறைமையானது வாடிக்கையாளர்கள் தமது .......................... ஆரம்பிப்பதற்கும் நிதிசார் .......................... நிறைவேற்றுவதற்கும் வசதியளிக்கின்றது.

(ஆ) இலங்கையில் அரசாங்கத் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட நிறுவகம் .......................................... என்பதுடன் அதன் தொலைபேசி இலக்கம் ................. ஆகும்.

அ. கணக்குகளை, கொடுக்கல் வாங்கல்களை (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

ஆ. அரச தகவல் நிலையம், 1919 (ஒழுங்கு அவசியம் 2x1/2 = 1 புள்ளி)

Department of Examinations

**35.** (அ) ஏற்றுமதி விவசாய உற்பத்திப்பொருட்களின் நுகர்வுக்கான பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுமதி நாட்டின் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவகத்தால் வழங்கப்படும் ஆவணம் .......................... சான்றிதழ் என்பதுடன் கப்பலேற்றுகைக்காக பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது தொடர்பில் கப்பலேற்றுகை நிறுவனத்தால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆவணம் ...................... ஆகும்.

(ஆ) வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் உள்ளூர் கைத்தொழில்களை ............................ அரசாங்கமானது இறக்குமதிகளின் மீது ........................................ விதிக்கின்றது.

அ. சுகாதார / சுகநல சான்றிதழ்,
வார்நாமம் / சுமைச்சீட்டு /Bill of Lading (BL) (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

ஆ. பாதுகாக்கவும், தீர்வை (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

**36.** (அ) தொழிற் பிரிப்பின் காரணமாக ........................................... ஏற்படுவதுடன் அதன் மூலம் ஊழியர்களின் ........................................... அதிகரிக்கும்.

(ஆ) விளம்பரங்களை அச்சிடுதல் ................................. உற்பத்தி முறைக்கு உதாரணம் என்பதுடன் தனிப்பட்டவர்களுக்கான ஆடைகளை தைத்தல் ................................ உற்பத்தி முறைக்கு உதாரணம் ஆகும்.

Department of Examinations

அ. சிறப்பு தேர்ச்சி, உற்பத்தித்திறன் (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

ஆ. தொகுதி, வேலை / கட்டளை (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

**37.** (அ) ISO ................. நியமமானது சூழல்சார் முகாமைத்துவத்துக்கு உரியதென்பதுடன், ISO 9001 நியமமானது .................முகாமைத்துவத்துக்கு உரியதாகும்.

(ஆ) தகவல் முறைமையின் சகல பௌதீகக் கூறுகளும் ..............................என்பதுடன் தரவு செயன்முறைப்படுத்தலுக்காகப் பயன்படுத்தப்படும் கணினி நிகழ்ச்சித் திட்டம்.............................. ஆகும்.

அ. 14001, தர (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

ஆ. வன்பாகம், மென்பாகம் / வன்பொருள், மென்பொருள் (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

**38.** (அ) பொருட்கள் சேவைகளை நுகர்வதன் மூலம் நுகர்வோர் ................................. பெற்றுக் கொள்வதுடன் அது ...................... எனப்படுகிறது.

(ஆ) ................................ சிறந்த சேவையை வழங்குவதற்காக நிறுவனமொன்றின் சகல ஊழியர்களாலும் மேற்கொள்ளப்படும் கூட்டுமுயற்சி............................... சந்தைப்படுத்தல் என அழைக்கப்படும்.

அ. திருப்தியை, பெறுமதி (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

ஆ. வாடிக்கையாளருக்கு, உள்ளக / அக (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

**39.** (அ) தொகுதிக் கடன்களுக்கு ஒரு நிலையான வீதத்தில் ........................ செலுத்த வேண்டும் என்பதுடன் சாதாரண பங்குகளுக்கு மாறுபட்ட வீதத்தில் ........................ செலுத்த வேண்டியுள்ளது.

(ஆ) நிறுவனமொன்றின் தற்போதைய வேலைச் செயற்றிறனை அதிகரிப்பதாக ஊழிய ........................ காணப்படுகின்ற அதேவேளை எதிர்கால செயற்றிறனை மையப்படுத்தியதாக ஊழியர் ........................ காணப்படுகிறது.

அ. வட்டி, பங்கு இலாபம் (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

ஆ. பயிற்சி, அபிவிருத்தி (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

**40.** (அ) உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடும்போது நிதி முகாமையாளரது சம்பளமானது ................ கிரயமாக வகைப்படுத்தப்படும் அதே வேளை உற்பத்தி ஊழியர்களது சம்பளமானது .................... கிரயமாக வகைப்படுத்தப்படுகின்றது.

(ஆ) நிறுவனமொன்றின் பல்வேறு பிரிவுகளுக்கும் பதவி நிலைகளுக்கும் இடையிலான இடைத் தொடர்பை அமைப்பு ...................... எடுத்துக்காட்டும் அதேவேளை அவற்றை நிறுவன ............................... மூலம் சுருக்கிக்காட்ட முடியும்.

அ. மறைமுக / மேந்தலை / நேரில், நேர் / மூல / முதன்மை (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

ஆ. கட்டமைப்பு, வரைபடம் (ஒழுங்கு அவசியம் 2X1/2 = 1 புள்ளி)

**41.** வணிகங்கள் மனித விருப்பங்களை பூர்த்தி செய்யும் **நான்கு** வழிகளை குறிப்பிடுக.

- பொருட்கள் சேவைகள் உற்பத்தி மூலம்
- பொருட்கள் சேவைகள் பரிமாற்றம் மூலம்
- பொருட்கள் சேவைகள் களஞ்சியப்படுத்தல் மூலம்
- பொருட்கள் சேவைகள் போக்குவரத்து செய்வதன் மூலம் / விநியோகித்தல்

4X 1/2 = 2 புள்ளிகள்

**42.** வணிக ஒழுக்கங்களைப் பின்பற்றுவது எவ்வகையில் வணிகங்களுக்கு முக்கியமானது என்பதற்கான **நான்கு** காரணங்களைப் பட்டியலிடுக.

1 வணிகம் தொடர்பில் நம்பிக்கையும், விருப்பமும் உயர்வடைந்து காணப்படல்
2 போட்டி நிலமைகளுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்க முடிதல்
3 நிதி மோசடி தவிர்த்து நம்பிக்கையை கட்டியெழுப்ப முடிதல்
4 ஊழியர்களுக்கு வேறுபாடுகாட்டாது நியாயமாக நடத்துவதன் மூலம் சிறந்த மனிதவள முகாமைத்துவத்தை ஏற்படுத்தல்
5 நேர் மனப்பாங்கான வேலைச் சூழல் உருவாக்க.
6 சட்ட பிரச்சினைகளைத் தவிர்க்க
7 வணிகத்தின் நன்மதிப்பை உயர்த்துதல்
8 தனிநபர் மற்றும் நுகர்வோரைக் கவர்தல்
9 முதலீட்டாளர்களை ஊக்குவிக்க

4X 1/2 = 2 புள்ளிகள்

Department of Examinations

**43.** வணிகமொன்று நிறைவேற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் பிரதான நோக்கங்கள் **நான்கினைத்** தருக.

1 சந்தையில் நிலைத்திருக்க
2 இலாபத்தை உச்சப்படுத்த
3 விற்பனையை உச்சப்படுத்த
4 சந்தை பங்கை அதிகரிக்க
5 நுகர்வோர் திருப்தியை அதிகரிக்க
6 பங்கின் சந்தைப் பெறுமதியை அதிகரிக்க
7 வணிகரின் தனிப்பட்ட திருப்தி
8 சமூகத்தினதும் மக்களினது நலநோன்பலை பேணல்
9 ஊழியரின் சேமநலனைப் பேணல்

4x 1/2 = 2 புள்ளிகள்

**44.** வரையறுத்த தனியார் கம்பனிகளில் காணக்கூடிய வரையறைகள் **நான்கினை** எழுதுக.

- ஏற்கனவேயுள்ள பங்குதாரர்கள் தவிர புதிய நபர்களுக்கு பங்குகள் வழங்கவோ /விநியோகிக்க முடியாது.
- பங்குதாரர் பங்குகளை பங்குச் சந்தையில் விற்க முடியாது ( பகிரங்கமாக பங்குகளை விற்பனை செய்ய முடியாது)
- ஆகக் கூடிய பங்குதாரர் எண்ணிக்கை 50 ஆக வரையறுக்கப்பட்டிருத்தல்.
- பொதுக் கம்பனியுடன் ஒப்பிடும் போது வெளிவாரி மூலதனத்தை திரட்டும் வழிகள் குறைவு.
- பெரும்பாலான தனியார் கம்பனிகளின் உரிமை குடும்ப அங்கத்தவர்களிடையே வரையறுத்துக் காணப்படல்.

4x 1/2 = 2 புள்ளிகள்

Department of Examinations

**45.** இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு வெளிநாட்டுக் கம்பனிகள் பங்களிப்புச் செய்யக்கூடிய **நான்கு** வழிமுறைகளை எழுதுக.

- வேலைவாய்பை அதிகரித்தல்
- தொழில்நுட்பம் வழங்கல்
- நிதி வழங்கல்
- ஏற்றுமதி அதிகரித்தல்
- மூலதனப் பாய்ச்சலை விருத்தி செய்தல்
- போட்டிச் சந்தையை உருவாக்கல்
- பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்
- வெளிநாட்டு நாணயமாற்று உறுதித் தன்மை பேணல்

4x 1/2 = 2 புள்ளிகள்

**46.** வெளிநாட்டு வியாபாரத்தில் 'கொள்கலன்களைப்' பயன்படுத்துவதன் மூலம் வணிக நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய **நான்கு** அனுகூலங்களை எழுதுக.

- உயர் சரக்குப் பாதுகாப்பு (Cargo)
- குறைந்த கிரயம்
- சொந்தக் களஞ்சியமாகப் பயன்படுத்தல்
- வேகமான பரிமாற்றம்
- விரைவான போக்குவரத்து
- இலகுவாகக் கையாள முடியும்
- சேதங்கள், இழப்புக்கள் குறைவு

4x1/2 = 2புள்ளிகள்

47. வரையறுத்த பொதுக் கம்பனிகளால் பயன்படுத்தப்படும் நிதி மூலங்களுக்கு அமைவாக பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க

| உள்வாரி | வெளிவாரி |
|---|---|
| • நிறுத்திவைத்த இலாபம்<br>• பெறுமானத் தேய்வு ஒதுக்கம்<br>• மேலதிக சொத்து விற்பனை<br>• தொழிற்படு மூலதனக் கட்டுப்பாடு<br><br>2x1/2 = 1 புள்ளி | • பங்கு வழங்கல்<br>• வங்கிக் கடன்<br>• குத்தகை<br>• வங்கி மேலதிகப் பற்று<br>• தொகுதிக்கடன் வழங்கல்<br>• அடமான / ஈட்டுக்கடன்<br>• வாடகைக் கொள்வனவு<br>• வணிகப்பத்திரம்<br>• வியாபாரக் கடன்<br><br>2x1/2 = 1 புள்ளி |

Department of Examinations

48. வணிக நடவடிக்கைகளுக்காக இணையத்தைப் பயன்படுத்தக்கூடிய **நான்கு** வழிகளை எழுதுக.

- இலத்திரனியல் வர்த்தக நடவடிக்கைகளுக்கு
- பொருட்கள் சேவைகள் விளம்பரப்படுத்தல்
- போட்டியாளர் தொடர்பான தகவல்களை உடனடியாகப் பெறல்.
- தொடர்பாடல் கிரயத்தைக் குறைக்க
- உலகம் பூராகவும் சந்தையை விஸ்தரிக்க
- தகவல்களை இலகுவாகவும் விரைவாகவும் பெற்று பரிமாற்ற
- சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4x 1/2 = 2 புள்ளிகள்

49. வணிகத் திட்டம் ஒன்றை தயாரிக்கும்போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் **நான்கினை** எழுதுக.


- குவி மையப்படுத்தல்
- வாடிக்கையாளர்
- இலக்கு
- நிதி வளங்கலுக்கான தேவைப்பாடு

4x1/2 = 2புள்ளிகள்

50. இணைய வழி மூலமான கொள்வனவுச் செயன்முறையில் பயன்படுத்தப்படும் பின்வரும் ஒவ்வொரு குறியீடுகள் மூலமும் வெளிப்படுத்தப்படும் கருத்தினை எழுதுக

(1) 
பொருட் கொள்வளவு வண்டி (Shopping Cart) /.இணையவழி.கொள்வனவு.வசதி.(Online Shop) /பொருள் தெரிவு (Selecting /Add to Cart)

(2) 
கட்டளைகளை ஏற்றுக் கொள்ளல் (Accepting Order)/ கொடுப்பனவு தீர்த்தல் ( Payment)

(3) 
கட்டளை செயன்முறை (Order Processing) / ஆயத்தம் செய்தல் / பொதியிடல் ( Packaging)

(4) 
விநியோகம் (Delivery) / கப்பலிடுகை ( Shipping)

4x1/2 = 2புள்ளிகள்

பகுதி II
வணிகக் கல்வி

## பகுதி I

1. அஸ்வினி என்பவர் தொழில்சார் கற்கைநெறியொன்றைப் பூர்த்தி செய்ததன் பின்னர் 'ஆர்த்தி' எனும் பெயரில் அழகுக்கலை நிலையம் ஒன்றை ஆரம்பித்ததுடன் அதன் முகாமையாளராக அமரன் என்பவரை நியமித்தார். அஸ்வினி கடனாகப் பெற்றுக்கொண்ட ரூ. 500 000 ஐயும் தனது சேமிப்பில் இருந்து ரூ. 200 000 ஐயும் வணிகத்தில் முதலீடு செய்துள்ளார். இவர் இவ்வணிகத்துக்காக ரூ. 600 000 பெறுமதியான கட்டடமொன்றைக் கொள்வனவு செய்ததுடன் மிகவும் தரம் வாய்ந்த சேவையை வழங்குவதற்காக நவீன உபகரணங்களை இறக்குமதி செய்ய மீதிப் பணத்தைச் செலவிட்டார். அஸ்வினியும் அவரது பயிற்றப்பட்ட ஊழியர் குழாமும் வாடிக்கையாளர்களது வசதியைக் கருத்திற் கொண்டு அவர்களது வீடுகளுக்குச் செல்வதன் மூலமோ அல்லது அழகுக்கலை நிலையத்திலோ தமது சேவைகளை வழங்குவதற்கு எந்நேரத்திலும் தயாராக இருந்தனர்.

(i) பின்வரும் நியதிகளுக்கமைவாக இந்த வணிகத்தை வகைப்படுத்துக.

(அ) உடைமை : ..........................................................
(ஆ) நோக்கம் : ..........................................................
(இ) அளவு : ..........................................................
(ஈ) உற்பத்தித் துறை : ..........................................................

அ. உடைமை – தனியார் துறை வணிகம்
ஆ. நோக்கம் – இலாப நோக்கமுடைய வணிகம்
இ. அளவு – சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகம் / சிற்றளவு வணிகம்
ஈ. உற்பத்தித் துறை – சேவை துறை

4 × 1 = 04 புள்ளிகள்

(ii) (அ) அஸ்வினியின் வணிகமானது நபர் ஒருவரின் தேவையையா அல்லது விருப்பத்தையா பூர்த்தி செய்கின்றது என்பதனைச் சுருக்கமாக விவரிக்குக.

**விருப்பம்** 01 புள்ளி
உயிர்வாழ அத்தியாவசியமற்றது. 01 புள்ளி

(ஆ) விலை நீங்கலாக நுகர்வோரது கேள்வியினை அதிகரிக்கச் செய்வதற்கு அஸ்வினி பயன்படுத்தும் வேறு நுட்பங்கள் **இரண்டினைப்** பெயரிட்டு, விவரிக்குக.

**உயர்தரம்**
நவீன உபகரணப் பயன்பாடு

**வசதி**
வீடு வரை விநியோகம்
எந்த நேரமும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி

காரணிகள் குறிப்பிட 2 × 1/2 = 01 புள்ளி
விளக்க 2 × 1/2 = 01 புள்ளி



Department of Examinations

(iii) (அ) இவ்வணிகத்தின் பலங்கள் **இரண்டினையும்** பலவீனங்கள் **இரண்டினையும்** பட்டியலிடுக.

| பலம் | பலவீனம் |
|---|---|
| - அஸ்வினி தொழில்சார் கற்கை நெறியை பூர்த்தி செய்திருத்தல்.<br>- பயிற்றப்பட்ட ஊழியர் காணப் படல்.<br>- நவீன உபகரணங்களைப் பயன் படுத்தல்.<br>2 × 1/2 = 01 புள்ளி | - கடன் மூலதன அதிகரிப்பு<br>- தொழிற்படு மூலதனப் பிரச்சினை<br>2 × 1/2 = 01 புள்ளி |

(ஆ) அஸ்வினியின் வணிகமானது குறித்த தொழில்துறையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வழிகள் **இரண்டினை** விவரிக்குக.

- வேலை வாய்ப்பை உருவாக்குவதில் பங்களிப்பு செய்தல்.
- மொத்த தேசிய உற்பத்திக்குப் பங்களிப்பு செய்தல்.
- சிக்கலான விருப்பங்களைப் பூர்த்தி செய்தல்.
- வரி வருமானத்துக்குப் பங்களிப்புச் செய்தல்

2 × 1/2 = 01 புள்ளி

(iv) (அ) இவ்வாறான வணிகங்களில் காணப்படக்கூடிய வரையறைகள் **நான்கினைத்** தருக.

- உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு
- மேலதிக மூலதனத்தை பெற்றுக் கொள்வதில் கடினம்.
- உரிமையாளரினால் மேற்கொள்ளப்படும் தனிப்பட்ட தீர்மானம் வெற்றியளிக்காமல் போதல்.
- சட்ட ஆளுமை இன்மை
- நீடித்த வாழ்வின்மை
- வணிகத்தை விரிவாக்குவதில் முகாமையானது பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ளல்.
- நட்டங்களை உரிமையாளரே ஏற்றுக்கொள்ள வேண்டியிருத்தல்.

குறிப்பிட 4 × 1/2 = 02 புள்ளிகள்

Department of Examinations

(ஆ) அஸ்வினியின் வணிகத்தில் முயற்சியாண்மைக்கு மேலதிகமாக ஈடுபடுத்தப் பட்டிருக்கும் வளங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக.

நிலம் - கட்டட அமைவிடம்

மூலதனம் - கட்டடம் அழகுகலை நிலைய உபகரணம், பணம்

உழைப்பு - ஊழியர்கள்

அறிவு - ஊழியர் திறன், முகாமைத்திறன்

தகவல் - நுகர்வோரின் சுவை மற்றும் நடத்தை பாங்கு தொடர்பான தகவல்
சந்தை தொடர்பான தகவல், புதிய தொழிநுட்பம் தொடர்பான தகவல்

நேரம் - ஊழியர் வேலை நேரம்
இயந்திர மணித்தியாலம்
தீர்மானம் எடுக்கும் நேரம்

குறிப்பிட 4 × 1/2 = 02 புள்ளிகள்

(v) அஸ்வினியின் முயற்சியாண்மைசார் குணாம்சங்களையும் திறன்களையும் மேலும் முன்னேற்றக்கூடிய **நான்கு** வழிகளை விளக்குக.

**சுய மதிப்பீடு**

முயற்சியாண்மைத் திறன்களை இனம் கண்டு அத்திறன்கள் தன்னிடம் காணப்படுகின்றதா இல்லையா என்பதை அறிந்து தன்னிடம் காணப்படாத திறன்களை மேம்படுத்திக் கொள்ளல்.

**பயிற்சி**

முயற்சியாண்மைத் திறன்களை மேம்படுத்திக் கொள்ள பல்வேறு பயிற்சிகளில் பங்கு பற்றல்.

**கல்வி**

முயற்சியாண்மை தொடர்பான கல்வியை பெறல்.

**அனுபவம்**

முயற்சியாளராக அல்லது முயற்சியாண்மைகளில் கருமமாற்றுவதன் மூலம் அனுபவம் பெறல்.

குறிப்பிட 1/2 × 4 = 02 புள்ளிகள்
விளக்க 1/2 × 4 = 02 புள்ளிகள்

Department of Examinations

**2.** (i) (அ) முறைகேடான வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் உம்மால் முறைப்பாடு செய்யக்கூடிய வகையில் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ள நிறுவகங்கள் **நான்கினைப்** பெயரிடுக.

1. நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை
2. இலங்கை தரக்கட்டளைகள் பணியகம்
3. அளவை நிறுவை தரநியமச் சேவைகள் திணைக்களம்
4. மத்திய சுற்றாடல் அதிகார சபை
5. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் காரியாலயம்
6. மாவட்ட செயலாளர் காரியாலயம்

4× 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் முறைகேடான வியாபார நடவடிக்கைகள் **இரண்டினைச்** சுருக்கமாக விவரிக்குக.

1. விலையை மாற்றியமைத்தல்
2. காலாவதியான பொருட்களை விற்பனை செய்தல்.
3. முடிவுத் திகதியை மாற்றி அமைத்தல்
4. பொருட்களுக்கு செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தல்
5. தரமற்ற பொருட்களுடன் கலப்படம் செய்தல்
6. போலியான தகவல்களை வழங்கல்
7. அளவை நிறுவை மோசடி

4× 1/2 = 02 புள்ளிகள்

(ii) (அ) 'முறைசார்ந்த நிறுவனம்' என்பதனால் கருதப்படுவது யாது என்பதனை விவரிக்குக.

பொது நோக்கமொன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக தனிநபர் குழுவொன்றினால் உருவாக்கப்பட்ட அமைப்பு ரீதியான கட்டமைப்பை கொண்டுள்ள சமூக அலகொன்று முறை சார்ந்த நிறுவனமாகும்.

(மற்குறிப்பிட்டபடி இருந்தால் 2 புள்ளிகள் அல்லது மாணவரின் விடைக்கேற்ப புள்ளி வழங்கவும்)

(ஆ) பொது வரையறுத்த கம்பனிகளது குணாம்சங்கள் **நான்கினைத்** தருக.

1. ஆகக் குறைந்த பங்குதாரர் எண்ணிக்கை 1 ஆகவும் உச்ச எண்ணிக்கை வரையறையில்லை.
2. ஆகக் குறைந்த இயக்குனர்களின் எண்ணிக்கை 2 ஆகும்.
3. பங்குகளையும் பிணைப்பத்திரங்களையும் பகிரங்கமாக விற்க முடியுமாக இருத்தல்.
4. பங்குதாரர்களுக்கு பங்கிலாபம் பகிர்ந்தளிக்க முன்னர் கடன் தீர்க்கும் ஆற்றல் தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.
5. பங்குதாரர்களின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு
6. சட்ட ஆளுமையுடையது.
7. நீடிய வாழ்வுடையது
8. கணக்கு வைப்பதும் பிரசுரிப்பதும் கட்டாயமானது.

4× 1/2 = 02 புள்ளிகள்

(iii) (அ) 'அங்கீகார வணிகங்கள்' என்பதனை வரையறுக்குக.

- ஏதாவது பொருளொன்றை அல்லது சேவையொன்றை வழங்கும் வணிக நிறுவனமொன்று அப்பொருள் அல்லது சேவையினைக் குறித்த சந்தைப் பிரதேசமொன்றில் விற்பனை செய்வதற்கு மற்றொரு வணிக நிறுவனமொன்றுக்குச் சந்தர்ப்பம் வழங்குவதற்கு பயன்படுத்துகின்ற வணிக அமைப்பு முறையானது அங்கிகார வணிகம் எனப்படும். (பூரணமான விடைக்கு 2 புள்ளிகள்)

Department of Examinations

(ஆ) பட்டியல்படுத்தப்பட்ட பொதுக் கம்பனி ஒன்று பட்டியல்படுத்தப்படாத பொதுக் கம்பனியிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை விவரிக்குக.

1. பட்டியல்படுத்தப்பட்ட பொதுக் கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிமாற்றகத்தில் பதிவுசெய்யப்பட்டிருப்பதுடன் பட்டியல்படுத்தப்படாத பொதுக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டிருக்காது.
2. பட்டியல்படுத்தப்பட்ட பொதுக்கம்பனியின் பங்குகளை பங்குப்பரிமாற்றகத்தில் பரிமாற்றம் செய்ய முடியும் ஆனால் பட்டியல்படுத்தப்படாத பொதுக்கம்பனிகளின் பங்குகள் அவ்வாறு பரிமாற்ற முடியாது.
3. பட்டியல்படுத்தப்பட்ட பொதுக்கம்பனியின் பெயரின் இறுதியில் PLC எனும் பதம் காணப்படல் வேண்டும். ஆனால் பட்டியல் படுத்தப்படாத பொதுக்கம்பனிகளின் பெயர்களில் அவ்வாறு இடம்பெறமுடியாது.

2× 1 = 02 புள்ளிகள்

(iv) கீர்த்தி என்பவர் உள்ளூர் விநியோகத்தர்களிடமிருந்து மீன்களைக் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்யும் வணிகம் ஒன்றை நடாத்துகின்றார். கொவிட் 19 தொற்று நோய் காரணமாக மீனின் ஏற்றுமதி விலையானது கிலோ ஒன்றுக்கு 16 அமெரிக்க டொலரில் இருந்து 6 அமெரிக்க டொலராகக் குறைவடைந்தது. இதனால் கீர்த்தி தமது வணிகத்தை மூடிவிடுவதற்குத் தீர்மானித்தார். ஆனால் ஊழியர்களும் அப்பிரதேச மக்களும் இத்தீர்மானத்திற்கு எதிர்ப்பினைக் காட்டினர்.

(அ) இந்த வணிகத்தின் 'சமூகப் பொறுப்பு' என்பதனால் கருதப்படுவது யாது?

வணிகத்துடன் தொடர்புடைய அனைத்து அக்கறை செலுத்தும் பிரிவினர்களுக்கும் இயன்றளவில் நியாயமொன்றை நிறைவேற்றக் கூடியவகையில் நடவடிக்கை மேற்கொள்ளல் சமூகப் பொறுப்பு ஆகும். 01 புள்ளி

(ஆ) மேற்குறித்த வணிகத்தின் மீது அக்கறையுடைய **மூன்று** தரப்பினரைக் குறிப்பிடுவதுடன், அந்த ஒவ்வொரு தரப்பினரதும் அக்கறைக்கான காரணம் ஒவ்வொன்றையும் குறிப்பிடுக.

உரிமையாளர் / கீர்த்தி :
1. முதலீட்டுக்கு ஏற்ப திரும்பலைப் பெற்றுக் கொள்ளல்
2. வணிகவளர்ச்சி தொடர்பாக அறிந்துகொள்ளல்
3. சந்தைப்பங்கை அறிந்துகொள்ளல்

வாடிக்கையாளர் :
1. தொடர்ந்தேர்ச்சியாக உற்பத்திப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்
2. பொறுப்புக்களை உரியமுறையில் நிறைவேற்றுகின்றனரா என அறிந்து கொள்ளல்
3. தொடர்ந்தியங்கும் நிலையை உறுதிப்படுத்தல்

சமூகம் :
1. சூழல் பாதுகாப்புத் தொடர்பாக அறிய
2. வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள

வழங்குனர் :
1. தொடர்ந்தேர்ச்சியான கட்டளையைப் பெற
2. விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கான பணத்தைப் பெற்றுக் கொள்ள

ஊழியர் :
1. தொழில் பாதுகாப்பு
2. உயர்ந்நத சம்பளம்
3. உபகாரக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளல்
4. பதவி உயர்வைப் பெற்றுக் கொள்ளல்

பெயரிட 3× 1/ 2 = 1 1/2 புள்ளிகள்
காரணமிட 3× 1/2 = 1 1/2 புள்ளிகள்

Department of Examinations

(v) வணிகமொன்று ஏன் அதன் அக்கறையுடைய தரப்பினர் மீது கரிசனை செலுத்துகின்றது என்பதற்கான காரணங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் விளக்குக.

1. உரிமையாளர் – வாழ்வுத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு, முதலீட்டினை உச்சப்படுத்தல்
2. ஊழியர்கள் – ஊழிய வினைத்திறன் அதிகரித்துக் கொள்வதற்கு, ஊழியர்களின் வேலையில் திருப்தி ஏற்படல், ஊழியர்களைக் கவர்வதற்கு
3. கடன் வழங்குனர் – தொடர்ச்சியாகத் தேவைப்படுகின்ற நிதியினை ஈட்டிக்கொள்ள, குறைந்த செலவில் பெறமுடிதல்
4. அரசு – வரிச் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்கு, உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற, தொழிநுட்ப வசதிகளைப் பெறல்
5. வாடிக்கையாளர் – குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தையினைப் பாதுகாக்க, விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள, நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள

4× 1 = 04 புள்ளிகள்

**3.** (i) (அ) பங்குடைமை ஒன்றின் பங்காளர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. வணிகக் கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளல்
2. தனிப்பட்ட இலாபம் பெறாதிருத்தல்
3. நட்டத்தில் பங்கேற்றல்
4. போட்டி வணிகங்களில் ஈடுபடாதிருத்தல்

4× 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) பங்குடைமை வணிகமொன்றை கலைக்கத்தக்க சந்தர்ப்பங்கள் **நான்கினை** உதாரணங்களுடன் குறிப்பிடுக.

1. பங்குடமையின் நோக்கம், காலம் நிறைவேறினால்
2. பங்காளர் இறந்தால்
3. பங்குடமை மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டால்
4. நீதிமன்றக் கட்டளைப்படி
5. பங்காளர் ஒருவர் முறிவடைந்திருந்தால்
6. பங்குடமை தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்கினால்

4× 1/2 = 02 புள்ளிகள்

(ii) (அ) குத்தகைக் கம்பனிகளின் மூலம் வணிகர் ஒருவருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினை** எழுதுக.

1. கூடிய பெறுமானம் கொண்ட சொத்துக்களை முழுத்தொகையையும் செலுத்தாது பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தல்.
2. குத்தகைக்காக செலுத்தப்படும் வாடகையானது வருமான வரியிலிருந்து விலக்கப்பட்டிருத்தல்.
3. இயந்திரம் காலம் கடந்தவையாக மாறும் பொழுது ஏற்படுகின்ற நட்டத்தையும் மூலதன நட்டங்களையும் தவிர்த்துக் கொள்ளல்.
4. பாரியளவு தொகையை முதலீடு செய்யாது கூடிய வருமானத்தை ஈட்ட முடிதல்.
5. உழைக்கும் வருமானத்தில் இருந்தே குத்தகைக் கொடுப்பனவைச் செலுத்த முடிதல்.

4× 1/2 = 02 புள்ளிகள்

Department of Examinations

(ஆ) இலங்கை மத்திய வங்கியின் முகவர் நடவடிக்கைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. அரசின் கடன் முகாமைத்துவம்
2. வெளிநாட்டு நாணய கட்டுப்பாடு
3. சிறியளவிலான நிதியீட்டல் வேலைத் திட்டங்களுக்கு கிராமிய கடன் முன்மொழிவு முறைகள் தொடர்பில் தலைமை நிறுவனம் ஒன்றாக தொழிற்படல்.
4. ஊழியர் நம்பிக்கை நிதியினை முகாமை செய்தல்.

4× 1/2 = 02 புள்ளிகள்

(iii) (அ) உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளுக்கும் இடையே காணப்படும் வேறுபாடுகள் **இரண்டினை** விவரிக்குக.

| உரிமம் பெற்ற வணிக வங்கி | உரிமம் பெற்ற நிதி கம்பனி |
|---|---|
| 1. நடைமுறை கணக்கு பேணும் | - நடைமுறைக் கணக்கு பேணாது |
| 2. வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும். | - வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கலில் ஈடுபடாது. |
| 3. ஆரம்ப மூலதனம் அதிகம் | - குறைவு |
| 4. பிரதிகர்த்தா சேவை மேற்கொள்ளும் | - மேற்கொள்ளாது |
| 5. அரச மற்றும் தனியார் துறைகளில் காணப்படுகிறது | - தனியார் துறையில் மட்டுமே காணப்படுகிறது. |
| 6. 2011 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்க வியாபார நிதிச் சட்டத்திற்கு உட்படுகிறது | - 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்திற்கு உட்படுகிறது. |
| 7. கடனாக்க செயற்பாட்டில் ஈடுபடல் | - ஈடுபடாது |
| 8. வங்கி மேலதிகப் பற்று வழங்கும் | - வழங்காது |
| 9. வங்கி ஆணை, நாணயக் கடிதம், பயணிகள் காசோலை வழங்கும் | - வழங்குவதில்லை |
| 2 × 1/2 = 1 புள்ளி | 2× 1/2 = 1 புள்ளி |

Department of Examinations

(ஆ) 'லங்கா தீர்வு' (Lanka settle) முறைமையின் பிரதான தீர்வு முறைமைகள் **இரண்டினையும்** விவரிக்குக.

- <u>அதே நேர தீர்ப்பனவு முறைமை</u> RTGS: இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையில் பெறுமதி கூடிய கொடுப்பனவுகளை காலம் தாழ்த்தாது உயர் தொழில்நுட்பத்தையும் தர நியமங்களையும் பயன்படுத்தி தீர்ப்பனவு செய்ய உருவாக்கப்பட்டுள்ள கணனி கொடுப்பனவு முறை ஆகும்.

01 புள்ளி

- <u>பத்திரங்களற்ற பிணையகத் தீர்ப்பு முறை</u> SSDS: அச்சிடப்பட்ட பிணை பத்திரம் பாவனைக்கு பதிலாக பிணைப்பத்திரங்கள் கொள்வனவு செய்ய அல்லது விற்பனை செய்ய கொடுக்கல் வாங்கல் ஒன்றை மேற்கொள்வதற்கு ஆவணங்களின்றி பயன்படுத்துகின்ற முறைமை ஆகும்.

01 புள்ளி

(iv) (அ) ஆகாயப் போக்குவரத்து, பொருளாதாரத்திற்கு முக்கியமானதாக அமையும் விதம் தொடர்பாக **இரண்டு** காரணங்களை விவரிக்குக.

1. உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாத்துறையில் வளர்ச்சி
2. அன்னியச்செலவாணியை உழைத்தல்
3. வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவர்வதன் மூலம் மூலதனத்தை அதிகரித்தல்
4. போக்குவரத்தின் மூலம் விலை உறுதிப்பாட்டையும் பற்றாக் குறையையும் கட்டுப்படுத்தல்
5. விரைவான போக்குவரத்து
6. வரிவருமானம் உயர்வடைதல்
7. விரையங்களையும் சேதங்களையும் இழிவுபடுத்தல்
8. புதிய வேலைவாய்ப்புக்கான சந்தரப்பம் கிடைத்தல்

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) இலங்கையின் வீதிப் போக்குவரத்துத் துறையில் காணத்தக்க தற்போதைய போக்குகள் **இரண்டினை** உதாரணங்களுடன் விவரிக்குக.

1. நாடுபூராகவும் அதிவேக வீதி வேலைத்திட்டம் (கொழும்பு - கட்டுநாயக்கா, கொழும்பு - மாத்தறை)
2. பிரதான நகரங்களில் மேம்பாலங்கள் அமைக்கப்படல் (தெமடகொட, இராஜகிரிய)
3. நகர மத்தியில் சுரங்கவழிப்பாதை அமைக்கப்பட்டிருத்தல் (பொரளை, பதுளை)
4. நாடுபூராகவும் மாற்றுவழிகளை உருவாக்குதல்
5. கிராமப்புற சிறுவீதிகள் கொங்கிறீற் வீதிகளாக்கல்
6. நகர்சேர் கடுகதி பஸ் சேவைகளை அதிகரித்தல்

2× 1 = 02 புள்ளிகள்

Department of Examinations

(v) ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு சிற்றளவு வணிகங்கள் பங்களிப்புச் செய்யும் வழிகளை **நான்கு** காரணங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

1. கூடுதலான வேலைவாய்ப்பு உருவாக்கம் (பாரிய வணிகத்துடன் ஒப்பிடின்)
2. தேசிய உற்பத்தி அபிவிருத்தியில் செல்வாக்கு
3. பாரிய வணிகங்களுக்குத் தேவையான மூலப்பொருள் வழங்கலும், பண்டத் தொகுதிகள், சேவைகளை வழங்கலும்
4. உள்நாட்டு மற்றும் பிரதேச வள உச்சப் பயன்பாடு
5. மக்களின் வருமான மட்டம் அதிகரிப்பு
6. பாரிய வணிகங்கள் மேற்கொள்ளாத வணிகக் கருமங்களை மேற்கொள்ளல்
7. பாரம்பரிய நுட்பமுறைகளை புதிய தொழில்நுட்ப முறைகளுடன் இணைப்பதன் மூலம் உற்பத்திகளின் தரப்பண்புகள் அதிகரித்தல்
8. பிரதேச அபிவிருத்தி ஏற்படுவதுடன் நகரமயமாக்கல் காரணமாக ஏற்படுகின்ற பிரச்சனை குறைவடைதல்

4× 1 = 04 புள்ளிகள்

4. (i) (அ) 'நாணயக் கடிதம்' என்பதனால் கருதப்படுவது யாது?

- ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்தின் போது ஏற்றுமதியாளருக்குப் பணம் செலுத்துவதற்காக பொதுவாக பயன்படுத்தப்படும் ஊடகமொன்றாகும். இறக்குமதியாளரின் வேண்டுகோளிற்கமைய இறக்குமதியாளரின் சார்பாக அவரது வங்கியின் மூலம் ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு பணம் செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக இறக்குமதியாளனின் வங்கியினால் வழங்கப்படும் ஆவணத்தையே குறிக்கும்.

02 புள்ளிகள்

(ஆ) கடனட்டைகளின் மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதனால் வணிகமொன்றுக்குக் கிடைத்தக்க அனுகூலங்கள் **இரண்டையும்** பிரதிகூலங்கள் **இரண்டையும்** குறிப்பிடுக.

அனுகூலம்

- பணம் கிடைப்பதில் நிச்சயத்தன்மை உண்டு
- புரள்வு அதிகரிப்பதனால் இலாபம் அதிகரிக்கும்
- கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தலாம்
- இலவசமாக விளம்பரம் கிடைக்கும்.

2× 1/2 = 01 புள்ளி

பிரதிகூலம்

- தொழிற்படு மூலதனப் பற்றாக்குறைக்கு முகங்கொடுக்க நேரிடல்
- வங்கிக்கு தரகுக் கட்டணம் செலுத்த வேண்டியேற்படும்
- விசேட பயிற்சிகளுடனான ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டியேற்படும்

2× 1/2 = 01 புள்ளி

(ii) (அ) ஊழியர் சேமலாப நிதியத்துக்கு (EPF) பங்களிப்புச் செய்ய வேண்டிய தரப்பினரைக் குறிப்பிட்டு, அவர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டிய ஆகக் குறைந்த சதவீதங்களையும் தருக.

- ஊழியர் – 8%
- தொழில் கொள்வோர் – 12%

(ஒரு தரப்பினருக்கு 01 புள்ளி வீதம் 02 புள்ளிகள்)

(ஆ) காப்புறுதி **செய்யத்தகாத** இடர்களை இனங்காணக்கூடிய வழிகள் நான்கினைக் குறிப்பிடுக.

- இடரை எதிர்வுகூற முடியாதிருத்தல்
- இடரை பணரீதியாக அளவிடமுடியாதிருத்தல்
- இடர் நிச்சயமாக இடம்பெறுதல்
- இடரை உறுதிப்படுத்த முடியாததாக இருத்தல்
- தொடர்புகளிலிருந்து நீக்கப்படாததாக இருத்தல் வேண்டும்
- இயற்கைக் காரணங்களுடன் இடம்பெறக் கூடியதாக இருத்தல்
  உ.ம் : துருப்பிடித்தல், ஆவியாதல், தேய்வுறல்
- தனது திறன் பலம் என்பவற்றின் மூலம் ஏற்படும் இடர்
  உ.ம் : பரீட்சையில் தோல்வி, காதல் தோல்வி
- வழிவமைப்பில் ஏற்படும் மாற்றம்
- பிழையான முகாமைத் தீர்மானங்களால் ஏற்படும் இடர்

4× 1/2 = 02 புள்ளிகள்

Department of Examinations

(iii) (அ) காசோலை ஒன்றினை எழுதும்போது கருத்திற்கொள்ள வேண்டிய **நான்கு** விடயங்களைக் குறிப்பிடுக.

- காசோலை ஒன்றை எழுதும் போது அழியாத மை வகையினை பயன்படுத்த வேண்டும்.
- அடிக்கட்டையில் உரிய விபரங்களை குறித்துக் கொள்ள வேண்டும்.
- எழுதும் போது ஏற்படும் தவறுகளை ஒரு தனி கோட்டினால் வெட்டி பிறப்பிப்பவரின் முழுமையான கையொப்பத்தை இடுதல் வேண்டும்.
- ஒரே மொழியினை பயன்படுத்த வேண்டும்.
- பிறப்பிப்பவரின் கையொப்பத்தை உரியவாறு இட வேண்டும்.
- காசோலையில் இடப்படுகின்ற திகதி அதன் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.
- வெற்று காசோலையில் கையொப்பமிடாதிருத்தல் வேண்டும்.
- நடைமுறைக் கணக்கு மீதி தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்

$4 \times 1/2 = 02$ புள்ளிகள்

(ஆ) வரையறையுடனான சாட்டுதலின் முக்கியத்துவத்தினை **இரண்டு** காரணங்களுடாகச் சுருக்கமாக விளக்குக.

- குறித்த நபருக்கு காசோலை கிடைக்கப்பெறுவதனை உறுதிப்படுத்தல்
- மற்றவருக்கு சாட்டுதல் செய்தல் வரையறுக்கப்படல்
- காசோலைக்குப் பாதுகாப்புக் கிடைக்கப்பெறல்

$2 \times 1 = 02$ புள்ளிகள்

(iv) (அ) 'பொதுப் (General) பொறுப்புக் காப்புறுதி' என்பதனால் கருதப்படுவது யாது?

- ஆதனம் அல்லது வணிக நடவடிக்கைகளினால் மேலெழக் கூடிய எதேச்சையான நிகழ்வொன்றின் காரணமாக 3 ஆம் பிரிவினருக்கு ஏற்படக் கூடிய சேதம் சார்பாக அச் சொத்துரிமையாளர் மூலம் அல்லது வணிகர்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் காப்புறுதி.

01 புள்ளி

(ஆ) வணிக நடவடிக்கைகளுக்கு தொடர்பாடலின் முக்கியத்துவத்தினை **மூன்று** காரணங்களுடாக விளக்குக.

- வணிக நடவடிக்கைகளின் போது குறிப்பிட்ட பிரிவினருக்கிடையே கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காக
- சேவை வழங்குனர், சேவை பெறுநர் ஆகியோருக்கிடையிலான தொடர்பினைப் பேணல்.
- மானிட பௌதீக வளங்களை சிறந்த முறையில் முகாமை செய்ய
- விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக

$3 \times 1 = 03$ புள்ளிகள்

(v) வணிகமொன்றுக்கு 'பட்டைக் குறியீடுகள்' (Barcodes) முக்கியமானதாய் அமைவது ஏன் என்பதனை நான்கு காரணங்களுடாக விளக்குக.

- விரைவான துலங்கல் கிடைக்கும்
- பொருட் தொகுதியின் எண்ணிக்கையை இலகுவாகக் கண்டறியலாம்
- நுகர்வோரின் நன்மதிப்பு அதிகரிக்கும்
- மோசடிகள் குறைவடையும்
- மானிடத் தவறுகள் (Manual Errors) குறைவடையும்
- ஊழியர் பயிற்சி அவசியமில்லை
- தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் இலகு

$4 \times 1 = 04$ புள்ளிகள்

Department of Examinations

## பகுதி II

5. (i) (அ) 'நிறுவனம்' என்றால் என்ன என்பதனை விவரிக்குக.

ஏதாவது இலக்கொன்றை அல்லது இலக்குகள் பலவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒன்றாக வேலை செய்கின்ற பல நபர்களின் கூட்டு நிறுவனம் என்பதாகும்.

02 புள்ளிகள்

(ஆ) 'பயனுறுதி', 'வினைத்திறன்' ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பினை விவரிக்குக.

பயனுறுதி (Effectiveness)

வணிக நிறுவனமொன்று எந்தளவிற்கு உத்தேச நோக்கத்தை சரியாக அடையும் என்பதே பயனுறுதியாகும். அதாவது நிறுவன இலக்ககளையும் நோக்கங்களையும் திட்டமிட்டவாறு குறித்த காலவரையறையினுள் உச்சதரத்துடன் அடைந்துகொள்ளும் செயற்பாடு பயனுறுதியெனக் கருதமுடியும். இதனை "சரியானதைத் செய்தல் (Doing the right thing) எனவும் குறிப்பிடுவர்.

வினைத்திறன் (Efficiency)

உத்தேச நோக்கத்தை குறைந்த வளங்களைப் பயன்பத்தி உச்ச வெளியீட்டினைப் பெற்றுக் கொள்ளல் வினைத்திறன் எனப்படும்.அதாவது குறைந்தளவு உள்ளீடுகளைக் கொண்டு இழிவளவான கிரயத்துடன் கூடிய வெளியீட்டினைப் பெறுதலே வினைத்திறன் எனப்படும். இதனைச் "சரியாகச் செய்தல்" (Doing the thing right) எனவும் குறிப்பிடுவர்.

சரியானதைத் தெரிவுசெய்வதன் ஊடாக குறைந்த வளங்களைப் பயன்படுத்தி கருமங்களைச் சரியாகச் செய்தல் இவற்றுக்கிடையிலான தொடர்பாகும்.

(ii) (அ) நிறுவனமொன்று பன்முகப்படுத்தலின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் எழுதுக.

அனுகூலங்கள்

- உயர்மட்ட முகாமையின் கருமங்கள் (வேலைப்பழு) குறைவடைதல்
- தரமான தீர்மானங்களை எடுக்க முடிதல்
- இலகுவாக தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடிதல்
- கீழ்மட்ட ஊழியர்களை முன்னேற்றல்
- ஊழியர்களின் ஊக்குவிப்பு உயர்வடைதல்
- ஊழியர்களின் திருப்தி மேம்பாடடைதல்

2× 1/2 = 1 புள்ளி

பிரதிகூலங்கள்

- தீர்மானமெடுத்தல் தாமதமடைதல்
- கிரயம் அதிகரிப்பதற்கான வாய்ப்பு அதிரித்தல்
- தீர்மானம் எடுப்பதில் ஓரினத்தன்மை காணப்படாமை
- பதவி உயர்வு வழுங்கலின்போது பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும்
- துறைகளுக்கிடையில் ஒருங்கிணைதல் குறைவு
- கிரயம் அதிகரித்தல்

2× 1/2 = 1 புள்ளி



Department of Examinations

(ஆ) கட்டுப்பாட்டுச் செயன்முறையின் முக்கியத்துவம் பற்றி நான்கு காரணங்களைக் குறிப்பிடுக.

- உற்பத்திப் பொருளின் தரத்தினைப் பாதுகாத்துக் கொள்ள முடிதல்
- கிரயத்தைக் குறைத்துக் கொள்ள முடிதல்
- வழுக்களைக் குறைப்பதற்கு / பூச்சியமட்டத்திற்கு கொண்டு வருவதற்கு
- சூழல் மாற்றங்களுக்கேற்ப சீராக்குவதற்கு
- நிறுவனத்தின் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்வதற்கும் மற்றும் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கும்
- நிறுவனத்தின் செயற்பாட்டு அடைவு உத்தேச அளவில் இடம்பெறுகின்றதனை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு

4 × 1/2 = 02 புள்ளிகள்

(iii) (அ) உற்பத்திப்பொருளொன்றின் 'சேர்க்கப்பட்ட பெறுமதி' என்றால் என்ன?

செயற்பாட்டு நடவடிக்கையின் போது பயன்படுத்தப்படும் பல்வேறு வளங்கள் வெளியீடுகள் எனும் நிலைக்கு மாற்றுவதற்கு நிலைமாற்றல் செயன்முறைக்கு உட்படுத்தப்படும். இதன்போது உள்ளீடுகளுக்கு பெறுமதி ஒன்றை சேர்ப்பதன் மூலம் வெளியீட்டின் பெறுமதி அதிகரித்தல் ஆனது சேர்க்கப்பட்ட பெறுமதி என அழைக்கப்படும்.

02 புள்ளிகள்

(ஆ) 'உற்பத்திப் பொருள் தளவமைப்பு' என்பதனை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

அனைத்து உற்பத்தியும் ஒரு நிலையத்திலிருந்து மற்றுமோர் நிலையத்திற்கு நேராகத் தொடர்ந்து பாய்ந்து செல்லும் முறையில் இட அமைவை ஒழுங்குபடுத்துதல் உற்பத்திப் பொருள் தள அமைவுத் திட்டம்.
உ.ம்:- தளபாட, மோட்டார்வாகன நிறுவன தள அமைப்பு

02 புள்ளிகள்

(iv) (அ) முகாமையாளர் ஒருவருக்கு வலு கிடைக்கப்பெறும் மூலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. பதவியின் அடிப்படையில் சட்ட ரீதியாக கிடைக்கின்ற அதிகார வலு
2. சிறப்பாற்றல் வலு
3. வெகுமதிகளை வழங்குவதற்கான வலு
4. தண்டனை வழங்குவதற்கான வலு
5. நிர்ப்பந்திக்கும் வலு

2 × 1/2 = 01 புள்ளி

(ஆ) உயர் மட்ட முகாமையாளர்களுக்கு எண்ணக்கருவாக்கத் திறன்கள் ஏன் மிகவும் முக்கியமானது என்பதனை **இரண்டு** காரணங்களைக் குறிப்பிட்டு, விளக்குக.

- நீண்டகால தந்திரோபாய தீர்மானங்களை எடுக்க
- இயங்கும் சூழலில் கிடைக்கக் கூடிய எண்ணங்களைப் பகுப்பாய்வு செய்ய
- இயங்கும் சூழலில் எழுகின்ற எண்ணங்கள் தொடர்பாக தீர்மானம் எடுக்க

2 × 1 1/2 = 3புள்ளிகள்

Department of Examinations

(v) சரவணாஸ் சப்பாத்து உற்பத்திக் கம்பனியின் உண்மையான மற்றும் எதிர்வுகூறப்பட்ட விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | 2020 (உண்மையான) | 2021 (எதிர்வுகூறப்பட்ட) |
|---|---|---|
| சப்பாத்துச் சோடிகள் (அலகுகள்) | 500 | 1000 |
| நிலையான கிரயம் | ரூ. 212 000 | 50% ஆல் அதிகரிக்கப்பட்டது. |
| மாறும் கிரயம் (சப்பாத்துச் சோடி ஒன்றின்) | ரூ. 200 | ரூ. 200 |
| விற்பனை விலை (சப்பாத்துச் சோடி ஒன்றின்) | ரூ. 730 | ரூ. 730 |

2021 ஆம் ஆண்டிற்குரிய பின்வருவனவற்றினைக் கணிப்பிடுக.

(அ) மொத்த உற்பத்திக் கிரயம்
(ஆ) சப்பாத்துச் சோடி ஒன்றின் உற்பத்திக் கிரயம்
(இ) தொகைகளில் சமப்பாட்டுப் புள்ளி
(ஈ) 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சமப்பாட்டுத் தொகையின் வேறுபாடு

Department of Examinations

அ. மொத்த உற்பத்திக் கிரயம்

நிலையான கிரயம் = ரூபா 318,000
மாறும் கிரயம் = ரூபா 200,000
ரூபா 518,000 — 01 புள்ளி

ஆ. சோடி ஒன்றின் உற்பத்திக் கிரயம் = மொத்த உற்பத்திக்கிரயம் / மொத்த உற்பத்தி அலகுகள்

= 518,000 / 1,000

= ரூபா 518 — 01 புள்ளி

இ. அலகொன்றின் பங்களிப்பு = அலகு விற்பனை விலை – அலகு மாறும் கிரயம்

= ரூபா 730 - ரூபா 200
= ரூபா 530

சமப்பாட்டுப் புள்ளி = நிலையான கிரயம் / அலகொன்றின் பங்களிப்பு

= 318,000 / 530 = 600 சப்பாத்துக்கள் — 1 புள்ளி

ஈ. 2020 சமப்பாட்டுப் புள்ளி = 212,000 / 530

= 400 சப்பாத்துக்கள்

வேறுபாடு = 600 - 400
= 200 சப்பாத்துக்கள் — 1 புள்ளி

6. (i) (அ) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும்போது வணிகமொன்று முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- தொழிநுட்பம் திடீரென மாற்றமடைதல்
- பாரிய முதலீடு தேவைப்படுதல்
- சூழல் மாசடைதல் ஊடாக ஏற்படும் பிரச்சினைகள்
- திடீரென ஏற்படும் தாழிநுட்பத் பிரச்சினைகள் காரணமாக முழு உற்பத்திச் செயன்முறையிலும் ஏற்படும் இடையூறுகள்
- பயிற்றப்பட்ட ஊழியரின் பற்றாக்குறை

$4 \times 1/2$ = 02புள்ளிகள்

(ஆ) விசேட பண்டங்களிலிருந்து கடைப் பண்டங்கள் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதனை உதாரணத்துடன் விவரிக்குக.

- கடைப்பெருட்களுக்கு அதிக கேள்வி காணப்படும்
- கடைப்பொருள் ஒப்பீட்டளவில் விலை குறைவானதாகவும் வாங்கும் அளவு அதிகமாகவும் காணப்படும்.
- கடைப்பொருட்களுக்கு அதிகளவிலான விற்பனை நிலையங்கள் காணப்படும்

உ.ம் :- இலத்திரனியல் உபகரணங்கள், ஆடை அணிகள், பாதணிகள், தளபாடம்

02 புள்ளிகள்

(ii) வணிகரொருவர் தனது பொருட்களுக்கான விலையை போட்டியாளர்களை விட 20% குறைவாகத் தீர்மானித்தார்.

(அ) மேற்குறித்த விலையிடல் முறையின் பிரதான நோக்கம் என்ன?

- விற்பனை அதிகரித்தல்
- இலாபத்தை உச்சப்படுத்துதல்

01 புள்ளி

(ஆ) குறித்த விலையிடல் முறையைப் பயன்படுத்துவதன் மூலம் வணிகரின் மொத்த இலாபத்தின் மீது ஏற்படும் தாக்கத்தினைச் சுருக்கமாக விளக்குக. (

- விற்பனை வருமானம் அதிகரித்தல்
- விற்பனைக் கிரயம் குறைவடைதல்
- மொத்த இலாபம் அதிகரித்தல்

ள்

Department of Examinations

(iii) (அ) வியாபார மேம்படுத்தலின் மூலம் வணிகமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. புதிய உற்பத்திகளை வாடிக்கையாளருக்கு அறிமுகம் செய்ய முடிதல்
2. உற்பத்திகளின் விற்பனையை அதிகரித்தல்
3. இலக்கு வாடிக்கையாளருக்குத் உற்பத்தி பற்றிய தகவல்களை வழங்குவதற்கு
4. போட்டியை வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு
5. ஏனைய சந்தைப்படுத்தல் கலவை மாறிகளின் வெற்றியைப் பேணுவதற்கு
6. நிறுவனத்தின் பிரதிவிம்பத்தை உயர்த்துவதற்கு
7. எதிர்காலக் கேள்வியை அதிகரிப்பதற்கு

4 × 1/2 = 2புள்ளிகள்

(ஆ) "நுகர்வுப் பண்டங்களின் தன்மைக்கேற்ப அவற்றின் விநியோக வழிமுறைகள் வேறுபடும்." இக் கூற்றை **இரண்டு** உதாரணங்களூடாக விளக்குக.

விரைவாகப் பழுதடையக்கூடிய பொருட்களுக்கு நேர்விநியோக வழிமுறைகளை அல்லது தனியான விநியோக வழியைத் தெரிவுசெய்தல் உ.ம்:- மரக்கறி, மலர்கள், பழவகைகள் போன்ற பழுதடையக் கூடிய பொருட்களை விநியோகிக்கும் போது நேரடி மற்றும் தனிவழியைப் பின்பற்றல்
அதேநேரம் நீண்டகாலப் பாவனையுடைய பொருட்களை இரண்டு அல்லது மூன்று வழிமுறைமூலம் விநியோகம் செய்தல் உ.ம்:- சீனி அரிசி மா போன்றவற்றை இரண்டாம் வழியில் விநியோகித்தல்

02 புள்ளிகள்

(iv) (அ) நிதி முகாமைத்துவத்தின் **நான்கு** நோக்கங்களைப் பட்டியலிடுக.

- உரிமையாளரின் செல்வத்தை உச்சப்படுத்தல்
- இலாபத்தை உச்சப்படுத்தல்
- பங்கொன்றின் உழைப்பை உச்சப்படுத்தல்
- நீண்டகால நிதி உறுதிப்பாட்டை உறுதிப்படுத்தல்
- திரவத்தன்மையை உத்தம மட்டத்தில் பேணுதல்

4× 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) பயனுறுதியான நிதி முகாமைத்துவத்தினூடாக பங்குதாரர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் **இரண்டினை** விவரிக்குக.

- அதிகரித்த பங்கிலாபத்தைக் உழைத்துக் கொள்ளலாம்.
- பங்கொன்றின் பெறுமதியை அதிகரித்துக் கொள்ளல்
- முதலீட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

2 × 1 = 02 புள்ளிகள்

(v) சந்தைத் துண்டமாக்கலின் ஊடாக வணிகரொருவர் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் **நான்கினை** விளக்குக.

(தொடர்ச்சி)

- சந்தை தொடர்பாக சிறந்த விளக்கம் ஒன்றை பெற்றுக் கொள்ள முடிதல்
- காலத்திற்கு ஏற்ப பொருத்தமான சந்தர்ப்பங்களை இனங்காணல்
- நிறுவன வளங்களை வினைத்திறனாகவும் பயனுறுதியுடனும் பயன்படுத்த முடிதல்
- சந்தை தொடர்பில் காணப்படும் இடர்களை இழிவுபடுத்திக் கொள்ள முடிதல்
- சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை சிறப்பாக மேற்கொள்வதற்குத் தன்மை ஏற்படும்.

4× 1= 04புள்ளிகள்

Department of Examinations

7. (i) வழங்கப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் ஒவ்வொரு விகிதங்களையும் கணிப்பிடுக.

| | ரூ. |
|---|---|
| தேறிய இலாபம் (வரிக்கு முன்னர்) | 60 000 |
| முன்னுரிமைப் பங்கிலாபம் | 15 000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 200 000 |
| சாதாரண பங்குகள் | 300 000 |
| விற்பனைகள் | 100 000 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 10 000 |
| கடன் வட்டி | 5 000 |

(அ) தேறிய இலாப விகிதம்
(ஆ) உரிமை மீதான திரும்பல் விகிதம்
(இ) கடன் உரிமை விகிதம்
(ஈ) வட்டிக் காப்பு விகிதம்

(அ) தேறிய இலாப விகிதம்

$$= \frac{\text{வரிக்கு முன்னரான தேறிய இலாபம்}}{\text{விற்பனைகள்}} \times 100$$

$$= \frac{60,000}{100,000} \times 100$$

= 60% 01 புள்ளி

(ஆ) உரிமை மீதான திரும்பல் விகிதம்

$$= \frac{\text{வரிக்குப்பின்னரான இலாபம் – முன்னுரிமைப் பங்கு இலாபம்}}{\text{உரிமை மூலதனம்}} \times 100$$

$$= \frac{50,000 - 15,000}{300,000} \times 100$$

$$= \frac{35,000}{300,000} \times 100$$

= 11.66 % 01 புள்ளி

(இ) கடனுரிமை விகிதம்

$$= \frac{\text{நிலையான வட்டி செலுத்தப்படும் கடன் மூலதனம்}}{\text{உரிமை மூலதனம்}}$$

$$= \frac{200,000}{300,000}$$

= 66.6 % 01 புள்ளி

(ஈ) வட்டிக் காப்பு விகிதம்

$$= \frac{\text{வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம்}}{\text{வட்டி}}$$

65,000
5,000

= 13 தடவைகள் 01 புள்ளி

Department of Examinations

(ii) (அ) 'ஒதுக்கங்களை மூலதனமாக்குதல்' என்றால் என்ன?

ஏற்கனவே உள்ள பங்குதாரர்களுக்கு குறித்த விகிதத்தில் கம்பனியினால் பங்குகள் இலவசமாக பகிர்ந்தளிக்கும் செயற்பாடு ஒதுக்கங்களை மூலதனமாக்கல் (Capitalization of Reserves) என்பதாகும். இவ்வாறு வழங்கும் பங்குகளுக்காக கம்பனிகள் தம்மிடம் காணப்படும் ஒதுக்கங்களை மூலதனம் எனும் நிலைக்கு மாற்றுதல் இடம்பெறுவதுண்டு. இதன்போது கூறப்பட்ட மூலதனம் அதிகரிக்கும் எனினும் பங்குதாரர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட மாட்டாது.

**02 புள்ளிகள்**

(ஆ) அரசாங்கப் பிணைப் பத்திரங்களில் முதலீடு செய்வதனால் முதலீட்டாளருக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

1. உயர்ந்த உறுதியான வட்டி கிடைத்தல்
2. அரச உத்தரவாதம் இருத்தல்
3. பல்வேறு குறுங்கால நீண்டகால முதலீட்டு வாய்ப்புகள் கிடைத்தல்
4. இடர் குறைந்த முதலீடாக இருத்தல்
5. உயர் திரவத்தன்மை காணப்படல்
6. முதிர்வடைய முன் கழிவுடன் மாற்றலாம்
7. வரிச் சலுகை கிடைத்தல்
8. நிதித் தேவையின் போது பிணையாகக் காட்ட முடிதல் 4× 1/2 = 2புள்ளிகள்

Department of Examinations

(iii) (அ) முதலீட்டாளர்களுக்கு பங்கு விலைச் சுட்டிகள் முக்கியத்துவமுடையதாய் அமைவதற்குரிய காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- பொருளாதார செயற்திறன் தொடர்பாக குறித்த விளக்கமொன்றைப் பெறமுடிதல்
- கம்பனி செயற்திறன் தொடர்பாக குறித்த விளக்கமொன்றைப் பெறமுடிதல்
- முதலீட்டுத் தீர்மானங்களை எடுக்கும்போது துணையாக இருத்தல்
- ஏனைய நாடுகளின் பங்குச் சந்தை நிலைமைகளோடு ஒப்பிடக்கூடியதாக இருத்தல்

4 × 1/2 = 02புள்ளிகள்

(ஆ) தற்காலிக அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதன் மூலம் வணிகமொன்றுக்குக் கிடைக்கும் அனுகூலங்கள் **இரண்டினை** விவரிக்குக.

1. ஊழியக் கிரயங்கள் குறைவடைதல்
2. ஒப்பந்த வேலைகளுக்கேற்ப இடையில் நிறுத்தவோ அல்லது நீடிக்கவோ முடிதல்
3. பொருத்தமான திறனுடையவர்களை இனங்கண்டு ஆட்சேர்க்க முடிதல்
4. ஊழியர்களை நீண்டகாலத் தொடர்பில் வைத்திருக்க வேண்டியதில்லை
5. மிகவும் சிறந்த ஊழியர்களைப் பெறமுடிதல்
6. நிறுவனத்திற்கு ஊழியரின் தொழில்சார் ஒழுக்கம், எண்ணம் என்பன நேரான தாக்கத்தை ஏற்படுத்தும்
7. குறைந்த நிதிப்பயன்பாடு

2 × 1 = 02புள்ளிகள்

(iv) (அ) செயற்றிறன் மதிப்பீட்டின் பின்னர் ஊழியர் அசைவினை (employee mobility) ஏற்படுத்தக்கூடிய விதங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- பதவி உயர்வு (Promotion)
- இடமாற்றம் (Transfer)
- விலகுதல் (Dismissal)
- வேலையினை முடிவுறுத்தல் (Termination)

4 × 1/2 = 02புள்ளிகள்

(ஆ) 'ஊழியர் வரவின்மை', 'ஊழியர் புரள்வு' ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

ஊழியர் வரவின்மை

ஊழியர்கள் வேலைக்கு சமூகமளிக்காமை மற்றும் வேலைக்கு சமூகமளித்தும் வேலை செய்யாமை காரணமாக நிறுவனத்திற்கு சேவை இழக்கப்படல் ஊழியர் வரவின்மை எனப்படும்.

ஊழியர் புரள்வு

குறித்த காலப்பகுதியொன்றினுள் ஊழியர்கள் நிறுவனத்தில் இருந்து விலகிச் செல்லும் அளவு ஊழியர் புரள்வு எனப்படும். 02 புள்ளிகள்

(v) நிறுவனமொன்றின் மனித வளக் கேள்வியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **நான்கினை** விளக்குக.

1. குறித்த பொருள் அல்லது சேவைக்கான கேள்வி
2. நிறுவனத்தின் நோக்கங்கள்
3. உற்பத்தி செய்யும் முறை
4. எதிர்காலத்தில் ஊழியர் ஓய்வுபெற்றுச் செல்லும் எண்ணிக்கை
5. பதவி உயர்வு பெறும் ஊழியர்களின் எண்ணிக்கை
6. பதவி விலகும் ஊழியர்களின் எண்ணிக்கை
7. எதிர்கால செயற்திட்டம்
8. சேவையிலிருந்து முடிவுறுத்தல்
9. நிறுவனத்தின் நிகழ்கால மற்றும் எதிர்கால நிதி நிலைமை
10. நாட்டின் பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் சட்டச் சூழல் நிலைமைகள்

4× 1 = 04புள்ளிகள்

**8.** (i) (அ) வணிகர் ஒருவருக்கு இணைய வங்கிச் சேவை மூலம் கிடைக்கும் **இரண்டு** அனுகூலங்களையும் **இரண்டு** பிரதிகூலங்களையும் பட்டியலிடுக.

அனுகூலங்கள்

1. இலகுவானதும் வேகமானதும்
2. தேவையான நேரத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யலாம் (7 x 24)
3. கிரயம் குறைவு
4. நேரம் சேமிக்கப்படல்
5. பணப்பரிமாற்றம் செய்யும் போது இடர் குறைவு
6. வங்கி கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்களை வேண்டிய நேரத்தில் பெறலாம்

2 × 1 = 02 புள்ளிகள்

பிரதி கூலங்கள்

1. வாடிக்கையாளர் தொடர்பான இரகசியத் தன்மை சில வேளைகளில் இழக்கப்படுவதால் இடர் அதிகம்
2. பாவனை தொடர்பான போதிய அறிவின்மை
3. இணைய வசதிகள் பற்றாக்குறை
4. கொடுக்கல் வாங்கலில் மோசடி இடம்பெறலாம்
5. தொழிநுட்ப உபகரணங்களின் பற்றாக்குறை

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) 'கணினி பாதுகாப்பு அச்சுறுத்தல்' என்பதனை இனங்கண்டு, அவ்வாறான **இரண்டு** அச்சுறுத்தல்களைக் குறிப்பிடுக.

கணினி முறைமையிலும் கட்டமைப்பிலும் பாதுகாப்பு தொடர்பில் ஏற்படும் இடர் 01 புள்ளி

1. கணினி வைரஸ்
2. கணினி முறைமையினுள் அனுமதியின்றி ஊடுருவல் (Hacking)
3. தகவல் திருட்டு
4. வன்தட்டுத் திருடல் (Hard disk) 2 × 1/2 = 01 புள்ளி

Department of Examinations

(ii) (அ) பயனுறுதியான தகவல் முறைமையின் மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கும் தொழிற்பாடுகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

- குறித்த பிரிவினருக்கு சரியான தகவல்களை பரிமாற்றம் செய்தல்
- உற்பத்திப் பொருட்களின் தரத்தினை உயர்த்துவதற்கு உதவுதல்
- நிறுவனத்தின் கிரயத்தினை இழிவுபடுத்துவதற்கு உதவுதல்
- போட்டி நிலைமைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கான சூழ்நிலை உருவாகுதல்
- முகாமைத்துவக் கருமங்களின் சிறப்பான தன்மையினை உறுதிப்படுத்தல்
- தேவைப்படும் எந்த சந்தர்ப்பத்திலும் தேவையான பிரிவினர்களுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல்.

4× 1/2 = 02 புள்ளிகள்

(ஆ) ஊழியர்கள் அறிவு மட்ட தகவல் முறைமையை எந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்துகின்றனர் என்பதனை விவரிக்குக.

புதிய அறிவினைக் கண்டறிவதற்காகவும், ஒழுங்கமைப்பதற்காகவும், இணைப்பாக்கம் செய்வதற்கும்

02 புள்ளிகள்

(iii) (அ) வணிகமொன்றுக்கு நிதித் திட்டமிடல் முக்கியமானதாக அமையும் விதத்தை **இரண்டு** காரணங்களூடாக விவரிக்குக.

- வணிக நடவடிக்கைகளுக்குத் தேவையான முதலீட்டின் அளவைத் தீர்மானித்தல்
- வணிக நிதியை முதலீடு செய்வது தொடர்பான தீர்மானம்.
- பற்றாக்குறை ஏற்படக்கூடிய காலத்தை இனங்கண்டு அதற்குத் தீர்வு எடுப்பதற்கு
- மேலதிமாக நிதி காணப்படும் காலத்தை இனங்கண்டு உற்பத்தித்திறன் கொண்ட கருமத்தில் ஈடுபடுதல்.

2 × 1 = 02 புள்ளிகள்

(ஆ) முயற்சியாளர் ஒருவருக்கு மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் எவ்வாறு முக்கியத்துவமுடையது என்பதனை **நான்கு** காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விவரிக்குக.

- எதிர்காலத்தில் வணிகத்திற்கு காசு உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல்களை எதிர்வு கூற முடியும்
- குறிப்பிட்ட காலத்தில் காசு மீதியை எதிர்வுகூறக்கூடியதாக இருக்கும்.
- காசு உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் என்பவற்றின் போக்கை முன்கூட்டியே அறிந்து கொள்ளல்.
- காசுப் பெற்றுக் கொள்ளல் காசுப்பிரயோகம் தொடர்பான வழிகளை முன்கூட்டியே அறிதல்.

4× 1/2 = 02 புள்ளிகள்

(iv) (அ) வணிகமொன்றின் தொழிற்படு மூலதனத்தை அதிகரித்துக் கொள்ளத்தக்க வழிகள் **இரண்டினை** எழுதுக.

1. மேலதிக இலாபத்தை அதிகரிப்பதன் மூலம்
2. காசு விற்பனைகளை அதிகரித்தல்
3. கடன் மீளச்செலுத்தும் காலத்தை நீடித்தல்
4. குறுங்கால பொறுப்புக்களை நீண்டகாலப் பொறுப்பாக மாற்றல்
5. நடைமுறையல்லா சொத்துக்களின் விற்பனை
6. காசுக்குப் பங்கு விற்பனை

2 × 1/2 = 01 புள்ளி

Department of Examinations

(ஆ) கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் பட்டியற்படுத்தப்பட்ட கம்பனி ஒன்றை பட்டியலில் இருந்து நீக்குவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அவற்றை விளக்குக.

1. கூறப்பட்ட மூலதனத்தை குறைவாகக் காணப்படல்
2. பங்குகளின் விலை தேவையான அளவில் காணப்படாமை
3. நிறுவனம் முறிவடைதல்
4. கொடுக்க வேண்டிய பணத்தை முறையாகச் செலுத்தாமை
5. பங்குப்பரிமாற்றக நிபந்தனைகளை பூர்த்தி செய்யாமை
6. நியாயமற்ற வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடல்
7. வணிகத்தைச் சுவீகரித்தல்

2 × 1 1/2 = 03 புள்ளிகள்

(v) ஒருவர் தனது பணத்தின் ஒரு பகுதியை பங்குச் சந்தையில் அல்லது வணிக வங்கி ஒன்றின் நிலையான வைப்பில் முதலீடு செய்ய எதிர்பார்க்கிறார். இந்த ஒவ்வொரு முறையினதும் அனுகூலங்கள் **இரண்டினையும்** பிரதிகூலங்கள் **இரண்டினையும்** விளக்குக.

பங்குச் சந்தை

அனுகூலங்கள்

- உயர்ந்த பிரதிபலன் கிடைத்தல்
- மூலதன இலாபம் கிடைத்தல்
- பங்கிலாபம் கிடைத்தல்
- சாதார பங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் வாக்களிக்கும் உரிமையைப் பெற்று இயக்குனராகலாம்
- மூலதன இலாபத்திற்கு வரிவிலக்கு

2 × 1/2 = 01 புள்ளி

பிரதிகூலங்கள்

- பங்குவிலை குறைவடையலாம்
- இலாபம் பெறாதபோது பங்கிலாபம் பெறமுடியாது
- முதலீட்டு இடர் அதிகம்
- பங்கிலாபத்திற்கு வரிசெலுத்த வேண்டும்

2 × 1/2 = 01 புள்ளி

நிலையான வைப்பு

அனுகூலங்கள்

- இடர் குறைவு
- நிலயான வட்டி வீதம்
- திரவத்தன்மை அதிகம்
- பிணையாக வைக்க முடிதல்
- விரும்பிய தவணைக்காலத்திற்கு வைப்பிலிடமுடியும்

2 × 1/2 = 01 புள்ளி

பிரதி கூலங்கள்

- முதிர்வு காலத்திற்கு முன் பணமாக்கினால் வட்டி குறைவு
- வட்டிக்குப் பதிலாக வேறோரு பிரதிபலனும் இல்லை

2 × 1/2 = 01 புள்ளி

Department of Examinations